1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

76-ம் புத்தகம் 23-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம்ஆண்டு ஆனி மாதம் 14-ந்திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## மறைந்து கிடக்கும் அருந்தமிழ் நூல்கள்

"தமிழை வளர்ப்பது என்பதற்குத் தமிழ்க்கல்வியைப் பரவச்செய்தல் என்பது பொருள்.

தமிழ்மொழியின் பொற்காலம் இற்றைக்கு இரண்டாயிரம்ஆண்டுகளுக்குமுன் உள்ளது. பொற்காலத்தில் எழுதப்பட்ட தமிழ்நூல்களையே இன்று நாம் படித்துப் போற்றிவருகின்றோம். இன்று தமிழ்மொழியைக் கற்பார் ஊக்கம்குன்றி இருக்கின்றனர். தமிழ்க்கல்வி பொதுமக்களாலும், அரசினராலும் பாராட்டப்படுவதும் இல்லை. பேச்சளவில் பலர் தமிழ்கற்றாரைப் புகழ்கின்றனரேயன்றிச் செயலளவில் அவருக்குஉரிய மதிப்புக் கொடுப்பதில்லை. இன்னோரன்ன காரணங்களால் தமிழ்வளர்ச்சி குன்றியிருக்கின்றது...."

உலகில் பேச்சாளர் பலராயிருப்பினும் எழுத்தாளர் மிகச் சிலரேஉள்ளனர். ஆராய்ச்சி சம்பந்தமான நூல்கள்எழுதுவதற்குப் பரந்தநூலறிவு வேண்டும். நீண்டநாள் பலநூல்களைப் பயின்று அறிஞர் எழுதிவைத்துள்ளநூல்கள் அச்சேறாது மறைந்துபோவது மிகவும் கவலைப்படத் தக்கதாகும். இவ்வாறு அச்சேறாதும், பிறரறியாதும்போன சிலநூல்களைப்பற்றி இங்கு குறிப்பிடுகிறேன். ஒருமுறை நாம் நல்லூர் சுவாமி. ஞானப்பிரகாசரின் இடத்துக்குச்சென்றபோது மேசையில் பெரிய கையெழுத்துப்பிரதிக் கட்டு ஒன்று காணப்பட்டது. அதுஎன்னஎன்று விசாரித்தபோது, அது ஒக்ஸ்போட் ஆங்கிலஅகராதியிலுள்ள எல்லாச் சொற்களுக்கும் நேர்தமிழ்அடங்கிய அகராதி என்றும், அது எம். எஸ். முத்துக்குமாரு என்பவரால் எழுதப்பட்டதென்றும், திருத்துவதற்காகத் தம்மிடம் அனுப்பப்பட்டிருக்கின்றதென்றும் அவர்கள் கூறினர். அவர் காலமானபின் நான் அவ்விடம் போனபோது இன்னொரு சுவாமியார் அவ்விடம்இருந்தார். அவரும் அவ்வகராதியை எனக்குக்காட்டினர். அதோடு இன்னொருஅகராதி அச்செழுத்துப்போல் கையினல்எழுதிப் புத்தகம்போல் கட்டப்பட்டிருந்தது அது ஆங்கிலத்திலுள்ள கலைச்சொற்களுக்கு எழுதப்பட்ட தமிழ்க்கலைச்சொல் அகராதி என்றும், அதற்காக ஞானப்பிரகாசசுவாமிகள் எம். எஸ். முத்துக்குமாரு குடும்பத்தினருக்கு 250 ரூபா கொடுத்த குறிப்பு ஒன்று காணப்பட்டதென்றும் மேற்படி சுவாமியார் கூறினர். எம். எஸ். முத்துக்குமாருஅவர்கள் பழமொழி அகராதி ஒன்று எழுதிவைத்திருக்கிறார்என்று நாம் சுவாமி ஞானப்பிரகாசர் மூலமறிந்து அதனைப்பார்வையிட அவரிடம் சென்றபோது அவர் நோயுற்றிருந்தார். அந்நூலைக் கொழும்பிலுள்ள தமிழ்ச்சங்கம்எதுவோ அச்சிடப்போவதாக அவர்தெரிவித்தார். அந்நூல் அச்சில் வந்ததாகத் தெரியவில்லை. இவ்வாறு கல்விப்பிரியர்கள் எழுதி

ந. சி. கந்தையாபிள்ளை

வைத்துவிட்டுச்சென்ற பலநூல்கள் ஆங்காங்கு கிடத்தல்கூடும்.

கிரீன் பாதிரியார்காலத்தில் எழுதிஅச்சிடப்பட்ட ஆங்கில வைத்தியம், தமிழ் மருந்துச்சரக்குகள் மூலிகைகளுக்கு நேர் ஆங்கிலச்சொற்களடங்கிய அகராதிபோன்ற நூல்கள் இன்று கிடைப்பதில்லை. சிலமருத்துவர் அவற்றைக் கையெழுத்துச் செய்து வைத்திருத்தலை யான் பார்த்துள்ளேன். வின்சுலோ அகராதிஎன்பது யாழ்ப்பாணத் தமிழரின்பெயரை என்றும் நிலைநாட்டத்தக்க நூல். சென்னைக்கலாசாலையார் வெளியிட்ட தமிழ்ப்பேரகராதி பெரிதும் இந்நூலின் துணையைக் கொண்டே செய்யப்பட்டது. சொல்லாராய்ச்சி வல்லாராகிய சுவாமி ஞானப்பிரகாசர் "சென்னை அரசாங்கத்தாரின் தமிழ்ப்பேரகராதியிலும்பார்க்க வின்சுலோஅகராதி சிறந்தது" என ஒருபோது நம்மிடம் கூறியுள்ளார். சென்னைத் தமிழ்ப் பேரகராதியில் பல குறைபாடுகள்உண்டு. அவ்வகராதியைக் கொண்டு ஒருவர் சொற்களின் திருத்தமானவழக்கு எதுஎனக் கண்டுபிடித்தல் முடியாது.

( தொடர்ச்சி [illegible] பக்கம் )

## மலையாளத்து நவமான க்ஷேத்திரம்

### 'பரணங்கானம்'

எங்குநோக்கினும் பரணங்கானம்—பரணங்கானம்—என்ற ஒரேபேச்சு. அல்போன்ஸா சகோதரியின் கல்லறையைப் பார்க்கவேண்டுமென்று எனக்கும்உள்ளூற ஒருஆவல். இந்த ஆவல்எழுந்து ஒருசிலஆண்டுகள் ஓடிமறைந்தும் தீர்ந்தபாடில்லை. ஆனால், எதிர்பாராத சம்பவமொன்றுஎன்னைக் கொச்சிக்கு இட்டுச்சென்றது. அல்போன்ஸாவின் கல்லறையைக் கனவிலும் கருதாது, யான் கொச்சிசென்றிருந்தும் அகஸ்மாத்தாய்ப் பரணங்கானம்புறப்படத் தயாரானேன். பழம் நழுவிப் பாலில்விழுந்தது; அதுவும்நழுவி வாயில் விழுந்தது போன்றிருந்தது என்நிலை! வலியக்கிடைத்த அரியசந்தர்ப்பத்தைக் கைநெகிழாது அன்றிரவே கொச்சித்துறையிலிருந்து பரணங்கானம் புறப்படலானேன்.

பால்போன்ற நிலவொளியில் இரவின் அமைதியைக்கலைத்துக்கொண்டும், இரையும்திரைகளைக் கிழித்துக்கொண்டும் நீராவிப் படகு சென்றது. அப்புனிதவதியின் க்ஷேத்திரத்தைக் காணப்போகின்றோமென்ற எண்ணமானது சகலகஷ்டங்களையும் மேற்கொள்ள, பரந்த பச்சைநிறநீரில் மிதந்துசெல்லும் அன்னத்தைஒப்ப ஆடிச்செல்லும் படகில்அமர்ந்து, திறந்த வெளியின் இயற்கைஅழகினைக் கண்டுகளித்தும், அழகின்மூலகாரணனைச் சிந்தித்துக்கொண்டும் இரவைக்கழிக்கலானேன். பொழுதுவிடிந்ததும் கோட்டையம்துறையைஅடைந்து க்ஷேத்திரத்தைநோக்கிச்செல்லும் பஸ் ஒன்றில் ஏறினேன். குளிர்ந்த தென்றலின் இன்பமும், இருமருங்கும் நெருங்கிச்செறிந்திருந்த பலா, மா, கமுகு, மிளகு, தென்னை, வாழை முதலியவற்றின்பசுமையும்சேர்ந்து பிரயாணத்தின்களைப்பைத் தணிக்கப் பரணங்கானம் போய்ச்சேர்ந்தேன்.

ஆ! பரணங்கானம் பஸ்நிலையத்திலேயே ஒருவித தெய்வீக உணர்ச்சி! ஊர்முழுவதையுமே ஓர்தெய்வசக்தி அடக்கிஆளுவது [illegible]செப்பற்கரிய அமைதி. [illegible]லிருந்து வலது புறம் செல்லின் புனிதவதி ஒன்பது ஆண்டுகளாகச் சீவித்துமரித்த அர்ச். கிளாரம்மாள்கன்னியின் மடம். மடத்தின்வாயிலைக் கடந்ததும் முதன்முதல் தென்படுவது சகோதரி அல்போன்ஸா மரித்த அறையே. அங்கே அன்பர்யேசுவுக்காக அவள் இன்பமுடன்அனுபவித்த எண்ணரிய உபாதைகளில் அவள்உபயோகித்த கட்டில், நாற்காலி, உடை, பாத்திரங்கள் முதலின யாத்திரிகர்பார்ப்பதற்காக ஒழுங்குடன் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொருநாளும் அங்கு அனுப்பப்படும் விண்ணப்பங்களும், நன்றிக்கடிதங்களும் அக்கட்டிலின் மேல் பரப்பப்பட்டிருக்கின்றன. அம்மஞ்சத்தைப் பார்க்கும் போது அப்புனிதநங்கை அதன் மேலிருந்து வேதனைதோய்ந்த தன்முகத்தை நம்பக்கந்திருப்பிப்புன்முறுவல் புரிவதாகத் தோன்றுகிறது. அல்போன்ஸாவின்பக்தர்களுக்கு அவள்மீதும் அவள்மன்றாட்டின்மீதும் எத்துணை ஆழ்ந்தநம்பிக்கைஏற்பட்டுவிட்டதென்றால், அவள்உபயோகித்த நாற்காலியும், துடைப்பமும்தேய்பிறைபோல்சிறிதுசிறிதாகத் தேய்ந்துவருகின்றன. முற்றாக ஒன்றுமே இல்லாது போய்விடுமென்றபயத்தால் அம்மடத்தின் பெரியோர் அவ்விரண்டையும் உயரத்தில் கட்டித்தொங்கவிட்டிருக்கின்றனர்.

பஸ்நிலையத்திலிருந்து இடப்புறம்சென்றால் எதிரில் தென்படுவது சகோதரி அல்போன்ஸாவின் கல்லறை. தமதுபத்தினியை விசேஷித்து மகிமைப்படுத்தவேண்டி அவளதுதெய்வீகபத்தா தெரிந்துகொண்ட அமைதிநிறைந்த அருமையான இடம்அது! கல்லறைக்கோவிலுள் கால் எடுத்துவைத்ததும் நம்மை மெய்மறக்கச்செய்கின்றது அக்கல்லறைக்காட்சி! சிற்பியின் திறமையால் சிறப்பிக்கப்படாத சாதாரணமானஓர் சலவைக்கல்லிலே அப்புனிதநங்கையின் பூதஉடல் புதைக்கப்பட்டதலத்தின் அறிகுறியாக விளங்கினாலும் அதைச்சூழ்ந்து சுடர்விட்டெரியும் மெழுகுவர்த்திகளும், அவற்றைசசுற்றி முழந்தாளிட்டு உருக்கவாஞ்சையுடன்

( தொடர்ச்சி 5-ம் பக்கம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

## புதிய அர்ச்சியசிஷ்டர்கள்

அர்ச். பேதுருவானவர் மகாலயத்திலே நிகழும் ஆனிமாதம் 21-ந்திகதி வியாழக்கிழமை முத்திப்பேறுபெற்ற சுத்தவாளர்கள்மூவர் அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டப்படவிருக்கின்றனர். பொவியோவின் மேற்றிராணியாரும், அர்ச். உத்தியான மரியாயின் கன்னிகாசபையை அடியிட்டவருமான முத். அன்ரோனியோ ஜியானெல்லி—ஓர் பர்ணபாசபைக் குருவான முத். பிரான்சீஸ்சேவியர் பியாஞ்சி—ஓர் கப்புச்சின்சபைச் சந்நியாசரான லாகோனுவின் முத். இக்னேஷஸ் என்பவர்களே அம்மூவருமாவர். அதன்மேல் இம்மாசம் 24-ந்திகதி ஞாயிறன்று கிறீஸ்தவர்களின் சகாயமாகிய மரியாயின் குமாரத்திகள்சபையை அர்ச். ஜோண் பொஸ்கோவுடன் சேர்ந்து அடியிட்ட முத். மரிய தொமினிக்கா மஸாறெல்லோவும், பிரசன்னமான அர்ச். சூசையப்பரின் கன்னிகாசபையை அடியிட்ட முத். எமிலியா தே வியாலரும் அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டப்படுவார்கள்.

## பிறிற்றனியின் அப்போஸ்தலர்

பிரான்ஸ் தேசத்திலே "பிறிற்றனியின் அப்போஸ்தலர்" எனப் பெயர்விளங்கியிருந்தவரும், யேசுசபையைச் சேர்ந்தவருமான ஆசா. போல் மோனெயர் சுவாமியார் சென்றவைகாசிமாதம் 20-ந்திகதி அர்ச். பேதுருவானவர் மகாலயத்திலே முத்திப்பேறுபட்டம் சூட்டப்பெற்றபோது, உலகமுழுவதையுமே பிரமிக்கச்செய்கின்ற பிறிற்றனிய மக்களின் ஆழ்ந்த ஸ்திரமான வேதவிசுவாசத்தையும், தேவபக்தியையும் பெரும்பாலும்திரும்ப ஸ்தாபித்துவைத்தவர் இந்தப்பரிசுத்த குருவானவரே. இற்றைக்கு 268 வருடங்களின்முன் இவர் பரமபதம் அடைந்தாராயினும் இன்றைக்கும் சீவந்தராயிருக்கும் ஒருவரைப்போலவே அவர்கள் இவரை நினைந்துவருகிறார்கள். பிறிற்றனிக்குப் போகுமாறு இவர் தெரியப்பெற்றபோது, புதிதாக அபிஷேகஞ் செய்யப்பெற்ற 33 வயசுள்ள ஓர் குருப்பிரசாதியாகவே இருந்தார். அப்போது பிறிற்றனி முழுவதும் சமயவிஷயமாய் முற்றும் தாறுமாறாய் இருந்துவரலாயிற்று. இவர் அவர்களின் பாஷையைச் சொற்பகாலத்தில் ஆர்வத்துடன்கற்று அவர்கள் மத்தியிலே 42 வருடகாலஞ்சீவித்து முன்போல அவர்களைத் தேவபக்தியிலும், வேதவிசுவாசத்திலும் நிலைபெறச் செய்தார். தாம் சீவந்தராய் இருந்தபோதே இவர் முன்னூறு புதுமைகளுக்குமேல் செய்திருக்கின்றார்.

## எகிப்திய புனிதஸ்தலங்கள்

அத்திமரத்தின் இனத்தைச் சேர்ந்த 'சிக்காமோர்' என்ற மரமும், மற்றூனிச் எனுமிடத்திலே திருக்குடும்பம்வசித்திருந்த வீட்டைக்குறித்துக்காட்டுகின்றகிணறும்உட்பட எகிப்துதேசத்திலுள்ள புனிதஸ்தலங்கள் முதல்முதலாகச் சலனபடம் பிடிக்கப்பட்டிருக்கின்றன. "எகிப்தின் கிறீஸ்துவ மரணசாதனப்பொருள்" என அறியப்படுகின்ற இந்தப்பில்மானது, திருக்குடும்பம் எகிப்துக்கு ஓடிப்போனதுமுதல் இற்றைவரையிலே கிறீஸ்துவேதத்தின்சரித்திரத்தில் எகிப்து பங்குபற்றியுள்ளபாகத்தை எடுத்துக்காட்டுகின்றது. அத்தேச பாடசாலைகளின் கத்தோலிக்கசங்க தலைவரான வண. ஹென்றி அய்றூட் சுவாமியாரின் மேற்பார்வையிலேயே இது தயாரிக்கப்படலாயிற்று.

## தொங்கின்நாட்டுவேதசாட்சிகள்

தொங்கின் (வியெற்-நம்) நாட்டிலே ரு-டுக் எனும் மன்னனின் ஆட்சிக்காலத்திலே 1857-ம் 1862-ம் ஆண்டுகளுக்கிடையில் நடந்தேறிய கொடியவேதகலாபனையின்போது வேதசாட்சிகளான பன்னூற்றுக் கணக்கானோரில் தொமினிக்குவின் சபையைச்சேர்ந்த நான்கு மேற்றிராணிமார் பதின்மூன்றும் சிங்கராய பாப்பானவராலும், பத்தாம்பத்திநாத பாப்பானவராலும் முத்திப்பேறுபட்டம் சூட்டப்பட்டிருந்தார்கள். பதினோந்தாம் ஆசீர்வாதப்ப பாப்பானவரின் காலத்திலே குருமாரும், கத்தோலிக்கருமாக வேறும் 1,315 வேதசாட்சிகளுக்கு முத்திப்பேறுபட்டம் சூட்டுதற்கான விசாரணை தொடக்கப்பட்டது. இவர்களில்முதற்குழுவினராகச் சென்ற சித்திரைமாதம் 29-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை 25பேர் பன்னிரண்டாம்பத்திநாத பாப்பரசராலே முத்திப்பேறுபட்டம் சூட்டப்பெற்றுள்ளனர். இவர்களிலே ஸ்பானியர்களான யோசெவ் டயஸ் சஞ்ஜுர்ஜோ, மெல்கியோர் கிருசியா சாம்பீட்றோ எனும் இருமேற்றிராணிமாரும், நான்கு குருமாரும், மற்றும் எழுத்தாளர், நீதிபதிகள், உத்தியோகஸ்தர்கள், கமக்காரர், கடற்தொழிலாளர் ஆதியோரும் அடங்குவார்கள்.

## சுவீடனும் கத்தோலிக்கசமயமும்

சுவீடன்நாட்டில் லுத்தேரின் புறொட்டஸ்தாந்த சபையையே சனங்கள் கைக்கொண்டு அனுசரிக்கவேண்டிய கட்டாயசமயமாக்கி 1726-ம்ஆண்டு ஓர்சட்டம் பிறப்பிக்கப்பட்டது. யேசுசபைக்குருமார் அங்கு கால்வைக்கப்படாதென்பது முதலாகக் கத்தோலிக்கசமயத்தை விரோதித்து அநேக பிரமாணங்கள் விதிக்கப்பட்டன. ஆனால், வருகிற தைமாசம் நடைமுறைக்கு வரவிருக்கும் நவமான சமயசட்டமானது அங்கு யேசுசபைக் குருமார் பிரவேசித்துச் சமய தொண்டாற்ற அனுமதிப்பதாகும். இன்னும் அங்கே சனங்கள் சந்நியாசமடங்களை ஸ்தாபித்து அவற்றில் சேரவும், எவரும் தங்கள் இஷ்டப்படி எச்சமயத்திலும் [illegible] ளவும், அதுவும் மனந்திரும்பி

அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் திருமக்கோணம்

சென் வின்செண்ற் டி போல் தருமசபை யாழ்ப்பாணம்



### நன்றியறிந்த ஸ்தோத்திரங்களும் மன்றாட்டங்களும்

அச்சுவேலி:— பரிசுத்த பாத்திமா மாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார், அர்ச். தீத்தம்மாள் இவர்களிடம் நான்கேட்டமன்றாட்டுக் கிடைக்கப்பெற்றேன். இன்னும் நான் கேட்டுக்கொண்டிருக்கும் மன்றாட்டுக்களையும் இவர்கள் பெற்றுத்தருவார்களென நம்பி இருக்கிறேன். இவர்களதுநாமங்கள் புகழப்படுவனவாக.

அரியமலர்

புங்குடுதீவு:— யேசுவின் திரு இரக்கத்தாலும், பரிசுத்த தேவமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். சவேரியார், அர்ச். அந்தோனியார், அர்ச். தெரேசம்மாள் ஆதியோரின் மன்றாட்டாலும் நான் நினைத்த காரியம் அனுகூலமானதால் நன்றியாக ஏழைகளின் அப்பத்துக்கு ரூபா 2 அனுப்புகிறேன்.

அந்தோனியார் பக்தன்

சிலாபத்துறை:— ஓர் பிறசமயநண்பர் வாலிக்குள் ஓர்நகையைக் கவனயீனமாய் விழவிட்டு மூன்றுநாள்வரை தண்ணீருள் தடவிப்பார்த்தும் காணமல் பதகளிக்கும்போது, அவ்வழிசென்ற நான் அவர் பதகளிப்பைக்கண்டு, ஆபத்தில் உதவிபுரியும் அர்ச். அந்தோனியாரை மன்றாடிக்கொண்டு தண்ணீரில் இறங்கித் தடவிய உடனே அது என்கையில் கிடைத்தது. என்றும் அவரின்நாமம் புகழப்படக்கடவது. நன்றியாக அவரின் தருமஅப்பத்துக்கு ரூபா 5 அனுப்புவதுடன் தயவுசெய்து இதைப் பிரசுரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

அ. ச. ம. செல்லத்தம்பி

மலாயா:— பாத்திமா மாதாவின் வேண்டுதலால் எனதுகுழந்தை பிறந்த பத்தொன்பதாம்நாள் கண்டசுரத்தினின்றும் காப்பாற்றப்பட்டது. அவளின் நாமம் எங்கும் புகழப்படக்கடவது.

M. S. J.

### கேட்டநன்மைகள் அனுகூலமானதினால் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

சிங்கப்பூர்: ஓர்உபகாரி 5-00, ஓர்உபகாரி 3-00— அலவத்தை: ஜி. சூசை 2-00— யாழ்ப்பாணம்: ஓர்உபகாரி -50 — முருங்கன்: எஸ். ஞானம்மாள் 1-00 — நாத்தாண்டி: வி. டி பி. பெறேரு 3-00— கல்கமுவா: ரி. ஜெற்றூட் -50— புத்தளம்: மோஸ் டி. ஜே. அன்ரன் 1-50 — பீற்றப்பிற்றற: ஏ. ஜே. பிலிப்பையா 6-00— மாருவில்: பிறுங் அன்ரன் 30-00 — பண்டத்தரிப்பு: எஸ். பி. துரைராசா 3-00— புத்தளம்: பி. ஜே. இம்மனுவேல் 2-00— கொற்றமல்லி: எலிசபேத் பர்ணபாஸ் 2-00— யாழ்ப்பாணம்: எம். என். எம். 3-00, அந்தோணிப்பிள்ளை 1-00 — அம்பிற்றியா: எம். டானியல் 4-00 — முருங்கன்: எஸ். கொன்ஸ்ரன்ரீன் 1-00— கரவெட்டி: எஸ். வஸ்தியாம்பிள்ளை 2-00 —பாசையூர்: மூப்பர்லேனு1-00—கொச்சிக்கடை: பி.பி. இராசமணிநாடார் 10-00 —முந்தல்: பி. பேதுரு பெர்னாண்டோ 1-00—கம்பளை: மிசெஸ் ஏ. டி. சேவியர் 3-00 — நீர்கொழும்பு: மேரி லோறு பெர்னாண்டோ 1-00 — எத்தாலை: டபிள்யூ. எம். பெர்னாண்டோ 2-00 — வட்டகொட: எஸ். ஜே. டேவிற்பிள்ளை 1-00 — யாழ்ப்பாணம்: பி. எஸ். வஸ்தி

அரசாங்கசமயத்தைவிட்டு இலகுவிலே மறுசமயத்தைத் தழுவிக்கொள்ளவும் அனுமதியளிப்பதாகும். லுத்தேர்சமயத்தைச் சேராதகுருமார் நிறைவேற்றுகிற விவாகங்களும் சட்டமுறையானவைகளாக அரசாங்கத்தால் [illegible] ஏற்றுக்கொள்ளப்படும்.

### மரியான் மத்தியாஸ் அவர்களின் மரணம்

புதுக்குடியிருப்பிலே பலராலும் நன்கறியப்பட்ட மரியான் மத்தியாஸ் அவர்களின் மரணத்தைக்கேட்டுக் கலங்காத உள்ளங்கள்இல்லை. தாரைதாரையாகக் கண்ணீர்வடிக்காத கண்கள் இல்லை. ஒருசிலர் தங்களை அறியாமலேயே குரவையிட்டுப் பிரலாபித்தும் விட்டார்கள். இவர் ஓர் உத்தமகத்தோலிக்க குடும்பத்தில் உதித்தவர். தாம்பெற்ற நற்பயிற்சியைத் தமது 55-ம்வயதுவரையும் தமது சீவியமுன்மாதிரிகையால் தம்சூழலுக்கு நன்குபடிப்பித்தவர். 'நான் கிறீஸ்தவன்' என்னும் விருதுவாக்கியத்தைக் கடைப்பிடித்து நடந்தவர். கிறீஸ்துவ எண்ணம்—கிறீஸ்துவபேச்சு—கிறீஸ்துவ நடை என்பவைகளில் இவர் எவருக்கும் பின்வாங்காதவர். அருள்சொட்டும் முகம். நீங்காக்கருணையுடையபார்வை. அன்புகனியும்பேச்சு. கண்டோர்க்குப் பயபக்தியை ஏற்படுத்தும்நிலை. அரவணைக்கும்கைகள். நன்முயற்சிக்குப் பின்வாங்காத மிகத்தீவிரமான கால்கள். ஊரின்முன்னேற்றத்துக்காக உருவான உடல். தொடங்கியவாசிகசாலைக்கட்டிடம் விரைவில்முடியவேண்டுமென்று துடிதுடித்துக் கொண்டிருந்த ஒருவீரபுருஷன். அயராத உழைப்பாளி. ஊரார்புகழும் உத்தமர். உயரியநூல்களைக் கற்றவர். உயிருள்ள கவிகள் பாடும் கவிஞர். பலநாடகங்கள்நடத்திப் புகழ்படைத்தவர். தனிப்பெருந்தலைமை ஸ்தானத்தைப்பெற்று ஊரை வழிநடத்தியவர். ஐயையோ! இப்பெருஞ்சிறப்புகள் பொருந்திய இவர் மின்னுமல் முழங்காமல் கருமம்நிகழ்ந்தாற்போல் எதிர்பாராதவிதமாக விஷந்தீண்டிப் பலவிஷவைத்தியர்களால் வைத்தியஞ்செய்யப்பட்டு அந்தியதேவதிரவிய அனுமானங்களைப்பெற்று இம்மாதம் 3-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணியளவில் மரணநித்திரையானார். அடுத்தநாள் பிற்பகல் 5 மணியளவில் கட்டளைக்குரவர் வண. C. மரியாம்பிள்ளை சுவாமியார் துக்கசங்கீதம் பாட, பெருந்திரளான இனசனர் புடைசூழ இவரின் பிரேதம சேமக்காலையில் பூமதானம் செய்யப்பட்டது. இவரை இழந்துதுன்புறும் மனைவிமக்களோடும், மருமக்கள் பேரப்பிள்ளைகளோடும் நானும் அநுதாபப்படுகிறேன். இதனை வாசிக்கும்அன்பர்கள் இவரது ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்றாடிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

R. I. P.

கண்டழுதோன்.

யாம்பிள்ளை 5-00 — முள்ளிக்குளம்: சி. ஞானம்மாள் குரூஸ் 1-00—சூராவத்தை: பி. ஏ. இராசரட்ணம் 5-00 — சண்டிருப்பாய்: முருகேசு அருளப்பு 2-00—கொள்ளுப்பிட்டி: ஓர்உபகாரி 2-00 — கண்டி: எம். எஸ். ஐயாத்தம்பி கோமஸ் 4-00 — செட்டிகுளம்: பஸ்ரியாம்பிள்ளை சவிரிமுத்து 5-00— கண்டி: மிசெஸ் ஜே. பி. வின்சென்ற் 1-00 — யாழ்ப்பாணம்: பி. சி. பொன்னையா 5-00 — புத்தளம்: மிசெஸ் ஜே. பி. செல்லத்துரை 5-00 — றக்குவானை: ஏ.ஏ. ராசரெட்ணம் 1-00— வதுளை: எம். எல். எல். ஞானப்பிரகாசம் 5-00— றக்குவானை: மிசெஸ் ஆரோக்கியசாமி 1-00 — கொழும்பு: எல். பி. சலமோன் 4-00— மூதூர்: க. அ. றேசாடிவாஸ் 1-00 — டொலோஸ்வொக்கி: எவ். பி. சாமுவேல் 1-00— பனிச்சவில்லு: ஆர். எஸ். பி. எஸ். தோமஸ் 2-00 — கேகாலை: ஜி. எஸ். சின்னத்துரை 1-00 —சுண்டிக்குளி: பி. எஸ். ஆர். 2-00 — யாழ்ப்பாணம்: ஜே. சவிரிமுத்து 5-00 —கல்கமுவா: வ. சந்தியாப்பிள்ளை 1-00 —நீர்கொழும்பு: எஸ். மனுவேல் 1-00— வட்டகொட: எஸ். ஜே. டேவிற்பிள்ளை 1-50—முந்தல்: எம். அந்தோனிப்பிள்ளை 4-00—கொழும்பு: எஸ். பேர்ட் பீற்றர் 5-00— நீர்கொழும்பு: அன்ரனி பெர்னாண்டோ 1-00.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதிர்ந்த முத்துக்கள்

துர்வாழ்க்கைநடத்திய ஓர் பெண் இருந்தாள். அவளதுபங்குக்கோவிலில் நடைபெற்ற பொது ஞானஒடுக்கப் பிரசங்கங்களுக்கு வரும்படி உறவினர் அவளை வற்புறுத்தினர். சரியென்று அவளும்சம்மதித்துச் சென்றாள். பிரசங்கங்கள் பலதினங்களாக நடைபெற்றன. அவளும்தவறாது போய்க்கொண்டிருந்தாள். ஆனால் பொது ஞானஒடுக்கத்தின் கடைசிநாளன்று அவளைக்காணோம். அவள்வசித்த அறைக்குப்போய்ப் பார்த்தார்கள். அது பூட்டப்பட்டிருந்தது. கதவை உடைத்துத்திறந்து உள்ளே சென்றார்கள். அவள் பிணமாய்க்கிடந்தனள். அவளது தினசரிக் குறிப்புப்புத்தகம் மேசையில் திறந்தமேரையாய்க் கிடந்தது. ஒருஉறவினர் அதைஎடுத்துப்பார்த்தார். சிலவாரங்களுக்குமுன் ஒருநாள் குறிப்பில் அவள் எழுதியிருந்ததாவது: "அடுத்தமாதம் நான் பாவசங்கீர்த்தனம்செய்வேன்." இன்னுஞ்சில பக்கங்களைப் புரட்டினான். "அடுத்தவாரம் பாவசங்கீர்த்தனம் செய்வேன்" என எழுதியிருந்தாள். அவள் சாகிறதற்கு முந்தினதினமன்று "நாளை பாவசங்கீர்த்தனம் செய்வேன்"என எழுதியிருந்தாள். அந்த"நாளை"அவளுக்குக் கொடுபடவேயில்லை. கடவுளுடன் சமாதானம்செய்யாது காலத்தைக் கடத்துகிறவர்களே,எச்சரிக்கை.

* * *

ஒருநாள்காலை இத்தாலியதேசநாட்டுப்புறப் பாதைஒன்றில் நன்றாகஉடுத்திய வாலிபன்ஒருவன் நடந்துசென்றான். அப்போது பட்டினியால் வாடிவதங்கிய ஒருஏழைப்பெண்ணை அவன் வழியில்பார்த்தான். பார்த்ததும் அவன் மனம் இளகியது. அவள்கிட்டப்போய் வெகு பட்சத்துடன்பேசித் தன்னிடமிருந்த பணத்தையெல்லாம் அவளிடம் கொடுத்தான். அவனுடைய தாராளமனத்தையும், மேலான அன்பையும்கண்ட அவள் தன்முழு மனதோடும் அவனுக்கு நன்றிகூறித் "தம்பி உன்னைக்கடவுள் ஓர்குருவாக்கும்படி நான்ஒவ்வொருநாளும் உனக்காகச் செபமாலை செபித்துவருவேன்" என்றுகூறினாள். வருடங்கள்பல சென்றன. அந்தவாலிபன் ஓர் குருவானார். அவர் எவ்வளவுநல்ல ஓர்குருஎன்றால், பின்னர்அவர் மேற்றிராணியாராகிக் கர்தினாலுமானார். அம்மட்டா! அதைவிடப் பெரியபதவியும் வகித்தார். தன் நன்றியின் அறிகுறியாக ஓதி ஒப்புக்கொடுத்துவந்த செபமாலைகளின் பலனைப்பார்க்க அந்தவிருத்தாப்பியமாது உயிருடன் இருக்கவில்லை. ஆனால், அவளுக்குஉதவிசெய்த வாலிபன்யார்? பதின்மூன்றும் சிங்கராயர் என்னும் பாப்பானவரே.

## நாலு சங்கதிகள்

—அமெரிக்கபேரான நூலாசிரியரும், சொற்பொழிவாளரும், றேடியோப் பேச்சாளருமான மொஞ். புல்டன் ஜே. ஷீன் சுவாமியார் நியூயோக்நகர் அதிமேற்றிராணியாரான கருதினால் ஸ்பெல்மன் ஆண்டவருக்குத் துணைமேற்றிராணியாராகப் பரிசுத்த பாப்பரசரால் நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார். இவருக்குத் தற்போது வயசு 56. முன்போல விசுவாசப் பரப்புதற்சபையின் அமெரிக்க தேசிய தலைவராகவும் இருந்துவருவார்.

—சீனுவிலே யுவசீனகட்சியை அடியிட்டு அதன்தலைவராக விளங்கியிருந்தவரும், தேசிய சீன அரசாங்க தலைவரான சியாங்காய்-ஷெக் அவர்களின் பிரதமஆலோசகருமான திரு. ரிசெங்சி அவர்கள் வாஷிங்டன்நகர ஆஸ்பத்திரிஒன்றிலே அந்தியவேளை மனந்திரும்பி நான்கின்நகர அதிமேற்றிராணியாரான நாடுகடத்தப்பட்ட யு-பின் ஆண்டவர்கரங்களால்ஞானஸ்நானம்பெற்றுத்

## பொது வர்த்தமானம்

### நீரோவின் சேர்க்கஸ்சாலை

போர்டாம் சர்வகலாசாலையைச் சேர்ந்த வண.யோசெவ் லிஞ்ச், போஸ்ரன்கல்லூரியைச்சேர்ந்த வண. டேனியல் லினெகன் எனும் யேசுசபைக்குருமார்இருவரும் அர்ச். பேதுருவானவர் மகாலயத்தில் நடத்திய பரிசோதனையிலிருந்து அங்கு ஆராய்ச்சிகள் நிகழ்த்துவதற்குப் பூமியதிர்ச்சியைத் தெரிவிக்கும்கருவியானது புதைபொருள் ஆராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுமெனக் கண்டறிந்திருக்கிறார்கள். நீரோமன்னனின் சேர்க்கஸ்சாலையைப் பின்னரும்தேடி ஆராய்வதற்கும், ஏலவே கண்டறியப்பட்டுள்ள புராதன றேமானிய சேமக்காலையைத் தொடர்ந்துஆராய்வதற்கும் இந்தப்பரிசோதனை வத்திக்கான் அதிகாரிகளுக்குப் பேருதவியாகுமாம். இந்தமுறையிலே சப்தஅலைகளின் பாவனையும் உட்பட்டிருக்கும். ஆராய்ச்சிசெய்யப்படும் இடத்திலே கற்பார்கள், கற்கள், களிமண், மண்இருப்பதை அவைகள் புலப்படுத்திவிடுமாம்.

### பூர்வகால அரிவரிஎழுத்துகள்

லெபனன்நாட்டுஅரசாங்கம் ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்துக்கு மதித்தற்கரிய அபூர்வமான பூர்வகால ஞாபக சின்னமஒன்றை அன்பளிப்புச் செய்திருக்கின்றது. அதாவது சலமோன் இராசாவின் காலத்திலே சிடன்நாட்டினை அரசாண்ட ஹீறூன்மன்னரின் சமாதியிலிருந்துஎடுக்கப்பட்ட முதல் நெடுங்கணக்கு அல்லது அரிவரிஎழுத்துகளாகும். ஹீறூன்மன்னர் சாதியிலே ஓர்போனிசியர். பிலிப் ஹிற்றி எனும் பேராசிரியர் கூறுகிறபடி இவர் கி. மு. 981 முதல் 947 வரையில் அரசாண்டார். இவர் சலமோன்இராசாவின் பெரியநண்பராய் விளங்கியிருந்து, செங்கடலுக்கென்று பலம் பொருந்திய ஓர்கப்பற்படையைஅமைப்பதிலே அவருக்குப் பேருதவியாயிருந்தாரெனச் சொல்லப்படுகிறது.

### மனிதஉடலும் கொழுப்பும்

சீவந்தராயிருக்கும் ஆடவர் ஸ்திரீகளின் சரீரத்திலுள்ள கொழுப்பின் நிறையைச் சரிவரக் கண்டறியக்கூடிய புதியகருவிஒன்று கண்டுபிடித்துச் செய்யப்பட்டிருக்கிறது. பிரித்தானிய வைத்திய ஆராய்ச்சிச்சங்கம் இதனைக் கொண்டு பரிசோதனைநடத்தியவிடத்து, கொழுத்தஆட்கள் இதுவரை கருதப்பட்டதினும் கூடியதொகையான கொழுப்பைக் கொண்டிருப்பதாகக் கண்டறிந்திருக்கிறது. 18 ஸ்ரோன் (252 றுத்தல்) நிறையுள்ள ஓர்மனிதன் ஏறக்குறைய 84 றுத்தல் கொழுப்பையும், 18 ஸ்ரோன் நிறையுள்ள ஓர் மனுஷி 126 றுத்தலுக்கு மேற்பட்ட கொழுப்பையும் தங்களுடன்கொண்டு செல்லுகின்றார்களாம். மெல்லியஉடலைக்கொண்ட ஓர்பெண் சாமான் நிறைந்த இருசூட்கேஸ்களைக் கையிற் கொண்டுதிரிவதுபோல 14 ஸ்ரோன் (196 றுத்தல்) நிறையுள்ள ஓர்பெண் அவ்வளவான கொழுப்பைக் கொண்டு திரிகின்றாளாம்.

---

திருச்சபையிலே சேர்ந்துகொள்ளலாயினர்.

—தாம் மாணித்ததும் தமதுமேனியை அர்ச். பேதுருவானவரின் கல்லறைக்குமேலாக அமைந்துள்ள அர்ச். பேதுருவானவரின் நிலவறைக்கோவிலிலே சென்றவருடம் அமைக்கப்பெற்ற புதியபலிபீடத்தின் முற்பக்கமாக அடக்கஞ்செய்யவேண்டுமெனத் தமக்குண்டான விருப்பைப் பரிசுத்த பாப்பரசர் தெரிவித்திருப்பதாகத் தந்திச்சமாச்சாரம் அறிவிக்கின்றது.

—ஓர்மகாயுத்தம் மூண்டுகொள்ளுமிடத்து, பிரித்தானியஇராச்சியத்தின் பாதுகாப்புக்கான ஆகாயப்படையின் பிரதமசேனாபதியாக நியமனஞ்செய்யப்பெ[illegible]

## மடுத்தாயே!

I

மாதாநின் தரிசனமே; மகனுரை வேண்டிநிதம்
தாதாநின் திருவருளே; தஞ்சமே; யென்றாலும்
ஏதெனைநீ பாராது எங்கெல்லாம் நோக்குகின்றாய்
ஓதாயோ காரணந்தான் உற்ற திருமடுத்தாயே!

II

இதயமதில் மிகநொந்தேன் என் இடர்கள் தீர்த்திடுவாய்
நிதமுமுந்தன் சரண்புகநன் னெறியெனக்குக் காட்டிடுவாய்
பதமலரைத் தேடுகின்றேன் பாவியைக்கண் பார்த்திடுவாய்
இதமுடனே உதவிடுவாய் என் அருமை மடுத்தாயே!

III

என்னையே பெரியனென எப்போதும் சிந்தித்தேன்
நின்னையே மறந்துபன்னாள் நிலைதளர்ந்து பவச்சேற்றில்
அன்னையே புரள்கின்றேன் அடியேனைக் கண்ணோக்கிக்
கன்னிகையே துணைச்செய்வாய் கருணையுள்ள மடுத்தாயே!

IV

மறப்பேனோ தாயேநின் மகிமையுள்ள திருவதனம்
துறப்பேனோ நீதந்த தூயமணிச் செபமாலை
பறப்பேனே சிறகிருந்தால் பாவியெனக் கடைக்கலமாம்
சிறப்புறுமுன் பதிதேடிச் செல்வமிகு மடுத்தாயே!

V

நாவினிலே எஞ்ஞான்றும் நானுனது நாமமதைப்
பூவினிலே போற்றியரும் புண்ணியங்கள் செய்தென்றும்
தாவியுந்தன் கமலபதம் தனைத்தினமும் துதித்திடவே
மேவியருள் செய்வாயே மேன்மையுள்ள மடுத்தாயே!

S. M.

---

## தேவ அன்னையின் மகோற்சவம்

தென்கோப்பாயிலே திருக்கோவில் கொண்டிருக்கும் சென்மராக்கினி அன்னையின் திருநாளானது வழமைபோலச் சென்றவைகாசிமாதம் 24-ந் தேதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழாக்களுடன் பத்தியருட்சிக்குரியவிதமாய்க் கொண்டாடப்படலாயிற்று. நல்லூர்மீசாமிலே சற்பிரசாதப்பெருநாள் இவ்வாண்டு முதன்முறையாகக் கொண்டாடப்படவிருந்தமையை முன்னிட்டு வண. கட்டளைக்குரவர் திருவிழாநாட்களிலே தேவநற்கருணையைப்பற்றி அரியபிரசங்கங்கள் செய்தனர். ஆதவன் கிரணங்கண்டு தாமரைமொட்டுகள் அலர்வதுபோன்று அவரதுபிரசங்கங்களைக்கேட்டு எம்மவர் இதயங்களும் திறபட்டுத் திவ்விய நற்கருணையின்பேரில் கொண்டிருந்த பத்தி புத்துயிர்பெற்று மலரலாயின. கடைசித் திருவிழாவாகிய 30-ந்தேதி இரவு வாத்தியங்கள் இசைக்க, பாடகர்குழாம் கீதங்கள்படிக்க வண. A. மரியதாஸ் சுவாமியாரால் மாலையாராதனை பாடப்பெற்றபின் சற்பிரசாத ஆசீர்வாதமும், சுரூபஎழுந்தேற்றமும், நடந்தேறின. மறுநாட்காலை நானாபக்கங்களிலுமிருந்துவந்த திரளானபக்தர்கள்சமூகமாக, வண. A. மரியதாஸ் சுவாமியாரால் திருநாட்பாடற்பூசை நிறைவேறியதும் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம்நடந்து, வண. கட்டளைச் சுவாமியாரால் திருச்சுரூபஆசீர்வாதம் அருளப்பெற்றுத் திருநாள் இனிதே சமாப்தியாயிற்று.

— நிருபர்

---

எம்பிளி அவர்கள் ஓர் கத்தோலிக்கரானவர். சென்றமகாயுத்தத்தின்போது பிரித்தானிய ஆகாயப்படையின் தலைசிறந்த போர்விமானியாய்இருந்துவருகையில் இவர்மனந்திரும்பிக் கத்தோலிக்கதிருச்சபையில் சேர்ந்துகொள்ளலாயினர்.

—மத்தியதரைக்கடலில் தற்போது இருந்துவருகின்ற பிரித்தானியகடற்படையைப் பெருக்கிப்பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் அடுத்தசில மாசங்களில் எடுக்கப்படவிருக்கின்றன. தற்போதுஅங்கு எட்டு யுத்தக்கப்பல்கள் இருந்துவருகின்றன. அவற்

## இஸ்பிரீ. ஆக. பின்வரும் 5-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(மத். 5: 20—24)

அக்காலத்தில் யேசுநாதர் தம்முடைய சீஷர்களைநோக்கித் திருவுளம்பற்றினதாவது: வேதபாரகரும் பரிசேயரும் கொண்டிருக்கிற பரிசுத்ததனத்தைப் பார்க்கிலும் உங்கள் பரிசுத்ததனம் அதிகமாயிராவிட்டால், பரலோக இராச்சியத்திற்குட் பிரவேசிக்க மாட்டீர்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். கொலை செய்யாதிருப்பாயாக; கொலை செய்பவனே வென்றால் நியாயத்தீர்ப்புக்குப் பாத்திரவானாயிருப்பானென்று முன்னோர்களுக்குச் சொல்லப்பட்டதாகக் கேட்டிருக்கிறீர்களே. ஆனால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: தன் சகோதரனைக் கோபிக்கிறஎவனும் நியாயத்தீர்ப்புக்குப் பாத்திரவானாகவும், தன் சகோதரனை ராக்கா (மூடன்) என்பவன் ஆலோசனைச்சங்கத் தீர்ப்புக்குப் பாத்திரவானாகவும், பைத்தியனேஎன்று சொல்பவன் நராக்கினிக்குப் பாத்திரவானாகவும் இருப்பான். ஆதலால், நீ பலிபீடத்தண்டையில் உன் காணிக்கையைச் செலுத்தும்போது, உன்சகோதரன் உன்மேல் ஏதோ மனத்தாங்கல் கொண்டிருக்கிறானென்று அங்கே நினைத்துக்கொள்வாயேயாகில், அவ்விடத்தில் பலிபீடத்துக்குமுன்பாக உன் காணிக்கையை வைத்துவிட்டு முந்த உன் சகோதரனோடு உறவாடப் போ; பின்புவந்து உன்காணிக்கையைச்செலுத்துவாயென்றார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

---

றுடன் இன்னும் அநேகயுத்தக்கப்பல்களைச்சேர்த்து மொத்தமாய் மூப்பதாக்கப்படவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருநாள் அட்டவணை

ஆனிமாதம் 1951

| | | | |
|---|---|---|---|
| வெ | 15 | அர்ச். வீத்தப்பர் | (சி) |
| சனி | 16 | அர்ச். இராசேந்திர அருளப்பர் | (வெ) |
| ஞா | 17 | இஸ்பிரீத். ஆகமன. பின்வரும் 5-ம் ஞாயிறு — அர்ச். அவித்தப்பர் | (ப) |
| திங் | 18 | அர்ச். எபிரேம் | (வெ) |
| செ | 19 | அர்ச். சுலியானம்மாள் | (வெ) |
| புத | 20 | அர்ச். சில்வேரியார் | (சி) |
| வியா | 21 | அர்ச். ஞானப்பிரகாசர் | (வெ) |

சத்தியவேத

பாதுகாவலன்

1951-ம் ஆண்டு
ஆனிமாதம் 14-ந் திகதி

வண. கே. செபஸ்ரியன்
சுவாமிகளின்

## தேகவியோகம்

யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே பெரிதும் புகழ்ச்சிக்குரிய விதமாய்த் திருத்தொண்டாற்றி வந்துள்ள காலங்கண்ட குருப்பிரசாதிகளுள் ஒருவராய், உத்தமதேவதொண்டராய், தெய்வபக்தியில் பழுத்தபழமாய், சிறந்த எழுத்தாளராய், கணிதசாஸ்திரத்தில் மிக்கான திறமைவாய்ந்தவராய், சாந்தம், தயையாதியாம் சற்குணசீலராய், முற்போக்குடையராய், கல்விக்களஞ்சியமாய், பல்வேறு பாஷாநிபுணராய், பத்திரிசியார்கல்லூரி ஆசிரியதிலகமாய், பத்திரிகாசிரியராய் எம்மத்தியிலே விளங்கியிருந்தவரான வண. கே. செபஸ்ரியன்சுவாமியவர்கள் ஓர்மாதகாலமாகவிருத்தாப்பியநோயுற்றிருந்து சென்ற 11-6-51 திங்கட்கிழமைஇரவு 8-30 மணியளவில்காலஞ்செல்லலாயினரெனும் துயரசெய்தியறிந்து பெரிதும் மனம்வருந்தலானோம். மரிக்கும்போது சுவாமியாருக்குவயசு 79.

வண. கயித்தாம்பிள்ளை செபஸ்ரியன்சுவாமியவர்கள் இன்று யாழ்ப்பாணத்திலே சத்தியவேதச் சிறப்புற்றிலங்கும் பதிகளில்ஒன்ருன இளவாலையிலே 1872-ம்ஆண்டு கார்த்திகை மாதம் 11-ந்திகதி ஜனனமாயினர். பக்தியுள்ளதம்பெற்ருரால் தேவதொண்டுக்கென்று அர்ப்பணஞ்செய்யப்பெற்ற இவர் 1883-ம்ஆண்டு அர்ச். மர்த்தீனுர்குருமடத்திற்சேர்ந்தார். சம்பத்திரிசியார்கல்லூரியிலே தமக்குண்டான புத்தித்திறமைவிளங்கக்கல்விபயின்ருர். 1897-ம்ஆண்டு மாசிமாதம் 14-ந்திகதியன்று மற்றிரு கீர்த்திவாய்ந்த குருப்பிரசாதிகளான வண. பி. எம். பிரான்சீஸ், வண. என். சந்தியாகுச்சுவாமிமார் சமேதராய்க் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்ருர். அதன்மேல் இவர் வவுனியா, அரிப்பு, நெடுந்தீவு, பச்சிலைப்பளி, அடம்பன் ஆதியாம்இடங்களிலே விசாரணைக்குரவராயிருந்தும், சம்பத்திரிசியார் கல்லூரிப் பேராசிரியராயிருந்தும், கொழும்புத்துறைச் சஞ்சுசையப்பர் தாபன அதிபராயிருந்தும், கத்தோலிக்க பாடசாலைகளின் பிரதம முகாமைக்காரராயிருந்தும், மேற்றிராசன ஆலோசனைச்சங்கத்தில் அங்கத்தவராயிருந்தும், ஈற்றில் 16 வருடகாலம்நாரந்தனைக்கட்டளைக்குரவராய், சின்னமடுச் செபமாலைமாதாசேத்திர பரிபாலனராயிருந்தும் சுமார் அரைநூற்ருண்டளவாக ஆற்றிவந்துள்ள அரும்பணிகளாகிய பெரும்பணிகளோ சாற்றுந்தரமன்று.

சுவாமியவர்கள் தீர்க்காலோசனைசெய்யாது எக்கருமத்திலும் இறங்கார். தாம்தீர்க்காலோசனை செய்துஇறங்கும் எக்கருமத்தையும் விமரிசையாகச்சாதிப்பதில் தயங்கார். கடல்போலும்ஆழ்ந்த அறிவுடையராயினும் என்றைக்குமே தாழ்ந்தபோக்குடன் நடந்துகொள்வார். ஓர்காலம் யாழ்ப்பாணத்திலே, லங்காதுவீபமறிய மங்காப்புகழ்படைத்த பெருங்கல்விமானுய், பேரான கல்லூரித்தலைவராய்ப் பிரஸ்தாபம்பெற்றிருந்த வண. பற்றிக்டன்சுவாமியவர்கள் பிரிந்து செல்லுங்கால், தம்பிரிவாற்ருதுவருந்திய ஆசிரியர்கள், மாணவர்களை விழித்துப்பேசியபோது “நாம் பத்திரிசியார்கல்லூரிக்குக் கல்விக்களஞ்சியங்களாய்— அருங் கலைச்சுரங்கங்களாய் இருகுருப்பிரசாதிகளை விட்டுப்போவது நமக்குப்பெரும் மனவாறுதலைத்தருகிற”தெனத் கூறிப்போந்தனர். அத்தகைய பிரதாபம்வாய்ந்த குரவர்களில் வண. செபஸ்ரியன் சுவாமியவர்களும் ஒருவரெனில் எவர்தான் ஆச்சரியவசத்தராகார்? அவாது பெருந்தகைமையையும், கல்வித்திறமையையும், அருமைபெருமையையும், அவரது தேசாபிமானமும், வேதாபிமானமும்நிறைந்த கல்வித்தொண்டு, சமூகதொண்டு, தேவதொண்டுகளையும் அவர் பழையமாணவர்களும், ஞானமக்களும்நன்குமதித்தவர்களாய் இன்றைக்குமேஅவரை வாயாரமனதார வாழ்த்திப்போற்றி அவர்மாட்டு மிகுந்த பேரன்பும் நன்றியும் பாராட்டிவருதல் அதிசயமன்று. சுவாமிகளின் போதப்பொலிந்த வசீகரதோற்றத்தையும், பூரண சந்திரோதயம் போன்று பொலிவுற்றுப் புன்னகைமோத எவரையுமேநோக்கும் பூரித்த வதனத்தையும், ஆய்ந்தோய்ந்து செயலாற்றுந் திறனையும் எங்ஙனம் நாம் வர்ணித்துரைப்பது?

சுவாமிகளின் திருமேனியானது ஆசாரியவஸ்திரங்கள் தரிக்கப்பெற்று, அழகியபேழையில் வைத்து, மறுநாட்காலை மேற்றிராணியாண்டவரின் சிற்ருலயத்திலிருந்து ஆசனக்கோயில் கொண்டுசென்று உயர்மேடையில் வைக்கப்பட்டதும், அவரது ஆன்ம இளைப்பாற்றிக்காகத் துக்கப்பாடற்பூசை நிறைவேறியது. பின் அன்றுபகல்முழுவதும் இளவாலை, நாரந்தனை, சுவாமியார் தமது ஈருந்தகாலத்தை ஏகாந்தத்திற்செலவிட்ட குளமண்கால் முதலாம் பலவிடங்களிலுமிருந்து இனசனரும், அவரிடம் வைதிகலெளகிக சகாயங்கள்பெற்றவருமாகப் பெருந்திரளானேர் கூட்டங்கூட்டமாக வந்து, அன்னார்க்கு [illegible] போன்று சற்[illegible] வதங்காது புன்னகைதவழ்ந்து மலர்ச்சிகாட்டிநின்ற அவர்வதனத்தைக்கண்ணுற்று அழுதகண்ணுஞ் சிந்தியமூக்குமாய் அவருக்குத்தங்கள்கடைசிவணக்கத்தைச் செலுத்தியவண்ணம் நின்ருர்கள். பின்னர் சாயந்தரம் 4 மணியளவில் மகாவந். ஜே. ஏ. கியோமார்ஆண்டவரும், மற்றும் முப்பது குருப்பிரசாதிகளும், குருத்துவமாணவர்களும் கன்னியாஸ்திரிமாரும், பல்வேறு கலாசாலைகளைச்சேர்ந்த மாணவர்கள் மாணவிகளும், மற்றும் பெருந்திரளானேரும் சமூகமாக, நம்மேற்றிராணியாண்டவர் அந்திமதிருச்சடங்குகளை நிறைவேற்றியதும் திருமேனியானது துக்கசங்கீதங்கள், செபவேண்டுதல்கள் மத்தியில் ஊர்வலமாகச் சேமக்காலை கொண்டு சென்று, அங்கே மகாவந். கியோமார் ஆண்டவர்அவர்கள் கடைசிஆசீர்வாதம் கூறிநிற்க, பிரலாபக்கண்ணீர்கள்மத்தியில் பூமதானம்செய்யப்படலாயிற்று.

R. I. P.

பத்தாம்பத்திநாத பாப்பானவர்

## முத்திப்பேறுபட்டம் சூடினர்

உலகம் முழுவதிலுமிருந்து போன 23 பேருக்கு மேற்பட்ட கருதினல்மார், 300 பேருக்கு மேற்பட்ட அதிமேற்றிராணிமார் மேற்றிராணிமார், பல்லாயிரக்கணக்கான குருமார் உட்பட ஐம்பதினுயிரம் யாத்திரிகர்கள் அர்ச். பேதுருவானவர் மகாலயத்தில் குழுமியிருந்த சமூகத்திலே, இம்மாசம் 3-ந் திகதி ஞாயிறுவாரமன்று பரவசந்தரும் திருவைபவங்கள் மத்தியில் பத்தாம்பத்திநாத பாப்பானவர் முத்திப்பேறுபட்டம் சூடலாயினர். உதரப்பவுந்திரநோய் கண்டுவருந்தி அவர்சலுகையால் அற்புதவிதமாகக்குணமடைந்த ஓர்கன்னிகாஸ்திரீயும் அத்தருணம் அங்கு சமூகமாயிருந்தாள்.

ஓர்அர்ச்சியசிஷ்டராகப் பிரகடனஞ்செய்வதற்கு முந்திய முதல்நடவடிக்கையாக முத்திப்பேறுபெற்றமகிமைக்கு அவரை உயர்த்துவதாகிய பாப்பரசரின் அதிகாரப்பத்திரத்தைக் கருதினுல் பிறெடெறிக்கோ ரெடெஸ்சீனிஆண்டவர் அங்கு பிரசித்தமாக வாசித்தபோது, யாத்திரிகர்கள்இட்ட ஆனந்தக் கூச்சலோ அர்ச. பேதுருவானவர் மகாலயத்தை அதிரச்செய்தது. அதேவேளையிற்ருனே பத்தாம்பத்திநாதரின் பெரியபிரதிமைப்படம்ஒன்று அம்மகாலயத்தின் பெரியபலிபீடத்துக்கு மேலாகத் தொங்கவிடப்படுமாறு பதமையாக உயர்த்தப்படலாயிற்று.

அத்தருணம் அவர்திருமேனியானது பாப்பானவருக்குரிய நீண்டவெண்ணங்கியும், சிவப்புவர்ணக் கழுத்தங்கியும், கணையாழியும், பிறவும் தரித்தபடி, தங்கமுலாமிட்ட சட்டங்கள்பூட்டிய கண்ணடிப்பேழை ஒன்றிலே பெரியபலிபீடத்தின்முன் [illegible]மாக ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. [illegible] இக்காட்சியிலே பத்தாம்பத்திநாதர்பிறந்த றியெஸிஎனும் சிறியபட்டினம் அவரது மருகிகளான பியாபரோலின், ரெசெற்ரு பரோலின் என்பவர்கள்தலைமையிலே ஓர் விசேஷயாத்திரையை ரோமாபுரிக்குஅனுப்பிவைத்தது. இதிலே ஒருதொகையான அவரது தூரஉறவினரும் அடங்கியிருந்தார்கள்.

பத்தாம் பத்திநாதர் 1835-ம் ஆண்டு ஆனிமாசம் 21-ந்திகதி பிறந்தார். முத்திப்பேறுபெற்ற பட்டம்சூட்டும்திருவைபவம்அவர் ஞானஸ்நானம்பெற்ற 116-ம் வருட நிறைவுதினமன்று நிகழலாயிற்று. முத்திப்பேறுபட்டஞ் சூடிய எட்டாவது பாப்பானவர் பத்தாம்பத்திநாதராவர். கடைசியாக இப்பட்டஞ்சூடிய பாப்பானவர் 1672-ம்ஆண்டில் ஐந்தாவது பத்திநாதபாப்பானவர். அர்ச்சியசிஷ்டபட்டஞ்சூடிய கடைசியானபாப்பானவரும் இவரே.

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

சென்ற சிலதினங்களாக ஓர்வித குளிரோடுகூடிய கடுங்காற்று பெரும் புயல்போல வீசிக்கொண்டிருக்கிறது. இந்தக்காற்ருலே இலங்கையில் பல்வேறுபகுதிகளிலும் சனங்களுக்குக் கஷ்டமுண்டாயிருக்கிறது. இப்படியான கடுஞ்சோழகம் கடந்தசில வருடங்களிலே கொழும்புப்பகுதியில் வீசியதில்லையாம்.

### உறுதிப்பூசுதல்

நம்மேற்றிராணியாண்டவர் இன்று காலை ஆசனக்கோவிலுக்கெழுந்தருளி அங்கு பெருந்திரளானேர் கூடியசமூகத்திலே திவ்வியபூசை நிறைவேற்றிய தன்மேல் சம்பத்திரிசியார் கல்லூரியையும், மற்றும் கலாசாலைகளையுஞ் சேர்ந்தபிள்ளைகளும், பிறருமாக 110 பேருக்கு உறுதிப்பூசுதல்செய்தருளினர்.

### வானெலியுரை

நாளை 15-ந்திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 6 மணிக்குக் கொழும்பு றேடியோநிலையத்திலிருந்து, தனிநாயகஅடிகளின் “என்உலகச்செலவு” எனும் பொருள்பற்றிய சிற்றுரை ஒலிபரப்பப்படும்.

### குருத்துவ வெள்ளியூபிலி

தற்போது மிருசுவிற் கட்டளைக்குரவராய் இருந்துவருகின்ற வண. யோசெவ் வேதநாயகம் சுவாமியவர்கள் தமது குருத்துவ இருபத்தைந்தாம் வருட வெள்ளியூபிலிவிழாவை நிகழும் ஆனிமாதம் 24-ந்திகதி ஞாயிற்றுக் கிழமை கண்டுகளிக்கவிருக்கிருர் என்பதை அவரதுஞானமக்களுக்கெல்லாம் மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்ரேம்.

### மானிப்பாய்த் திருநாள்

தமது ஜனனபதியாகிய மானிப்பாயிலே வண. சுவாமி. ஞானப்பிரகாசர் அவர்கள் அருந்தவமிருந்துஅடியிட்டுப் போன அர்ச். அந்தோனியார் கோவிலிலே இந்த அற்புதவள்ளலின் திருநாள்அடுத்துநிகழும் 17-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை வழமைபோலச்சிறப்பாகக் கொண்டாடப்படும். அதற்குமுந்திய திருவிழாக்கள் சென்ற 8-ந்திகதி ஆரம்பமாகி நடந்தேறிவருகின்றன. 16-ந் திகதி சனிக்கிழமை மாலை 8 மணிக்கு வேஸ்பர்பாடப்படும். 17-ந்திகதியாகிய திருநாளன்று காலை 7-30 மணிக்குப் பாடற்பூசையோடும், பின்னர் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்தோடும் திருநாள் நிறைவாகும்.

### அரசரின் மகிமைப்பட்டம்

இவ்வருடம் மாட்சிமைதங்கிய அரசபெருமான் தமது ஜனனவிழாச் சந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோஷத்தைமுன்னிட்டுச் சென்ற 7-ந் திகதி வியாழக்கிழமை இலங்கைப் பிரமுகர்களான முப்பதுபேருக்குப் பல்வேறு மகிமைப்பட்டங்கள் வழங்கியிருக்கின்றார். இவர்களில் செனற்றர் யு. ஏ. ஜயசுந்தரா, செனற்றர் ராஸிக் பரீத் எனும் இருவருக்கும் நைற்பட்டமாகிய "சேர்" பட்டம். ஏனையோரில் இருவருக்குச் சி. எம். ஜி. பட்டமும், இருவருக்குச் சி. பி. ஈ. பட்டமும், ஆறுவருக்கு ஓ. பி. ஈ. பட்டமும், இருவருக்கு ஐ. எஸ். ஓ. பட்டமும், பதின்மூன்று பேருக்கு எம். பி. ஈ. பட்டமும் சங்மானிக்கப்பட்டிருக்கின்றன. நைற்பட்டம் பெற்றுள்ள சேர். யு. ஏ. ஜயசுந்தர அவர்கள் இலங்கைப் பிரபலவழக்கறிஞர்களில் ஒருவர். ஐக்கியதேசியகட்சியின் காரியதரிசியாகத் தற்போது இருந்துவருகின்றார். சேர். ராஸிக் பரீத் அவர்கள் முஸ்லீம்களின் சிறந்த ஓர் தலைவர். தமது சமூகத்தின் சமூக, கலாசார, பொருளாதார, சமயமுன்னேற்றத்திற்காக உழைப்பதில் பிரசித்திபெற்றவர். அரசரின் மகிமைப்பட்டம்பெற்ற தமிழர்களிலே எம். பி. ஈ. பட்டம் பெற்றுள்ள திரு. எஸ். எம். தம்பிராசா, ஜே. பி. அவர்கள் இளைப்பாறிய ஓர் தோட்டமுதலாளியும், சமூகஊழியருமாவர். 83 வயசுடைய இவர் மாத்தளை டிஸ்திறிக்கிலுள்ள முதியோர்களில் ஒருவரும், அப்பகுதியில் சிறந்த மதுவிலக்கு அபிமானியுமாவர். எம். பி. ஈ. பட்டம் பெற்றுள்ள திரு. சி. ஜே. பெர்ணண்டோப்பிள்ளை சிலாபப்பகுதியிலே ஓர் பிரபலவர்த்தகர். சமூக சேவையில் மிக்க ஆர்வமுள்ளவர். லனசிகாமாவிலுள்ள வயோதிகர்சாலைக்குப் பெருந்தொகைப்பணம் நன்கொடையாக உபகரித்தவர்.

## புதியசமாதான நீதிபதிகள்

இம்முறை ஜே. பி. எனும் சமாதான நீதிபதிப்பட்டம்பெற்ற தமிழர்கள் — திரு. ஏ. எம். கே. குமாரசாமி, டக்றர் ஈ. ரீ. பியூவெல் என்பவர்களே. இவர்கள் முறையே கொழும்புப்பகுதிக்கும், யாழ்ப்பாணப்பகுதிக்கும் சமாதான நீதிபதிகளாவர். திரு. குமாரசாமி அவர்கள் கல்விகேள்வியில் சிறந்தவர். இலங்கைச் சர்வகலாசாலை றெஜிஸ்ருராக விளங்குகின்றார்.—டக்றர் பியூவெல் அவர்கள் மானிப்பாய்க் கிறீன் ஞாபக மிஷன் ஆஸ்பத்திரிக்கும், இணுவில் மிஷன் ஆஸ்பத்திரிக்கும் தலைவராகஇருந்து அவற்றின் பிரஸ்தாபத்துக்காக அயராதுழைத்து வருகின்றார். யாழ்ப்பாண மக்களுக்குப் பரோபகாரசிந்தையுடன் இவர் ஆற்றிவருகின்ற வைத்தியசேவை பெரிதும் பாராட்டத்தக்கது.

## புதிய முதலிமார்

முதலியார் பட்டம்பெற்ற தமிழர்கள்—முகாந்திரம் அத்தியார் அருணாசலம், முகாந்திரம் சரவணமுத்து குமாரசாமி என்பவர்கள். இவர்களில் முதலியார் அருணாசலம் அவர்கள் அச்சுவேலியிலுள்ள அத்தியார் இந்துக்கல்லூரியை ஸ்தாபித்து, 1920-ம்ஆண்டு முதல் அதனைப் பரிபாலித்து வருகிறார். தற்போது நீர்வேலிக் கிராமாபிவிர்த்திச்சங்க தலைவராகப் பதவிவகித்திருக்கிறார்.—முதலியார் குமாரசாமி அவர்கள் மட்டக்களப்பிலே உணவுப்பொருட்செய்கைவிருத்தியிலும், சமூகசேவையிலும் வெகுவாக ஈடுபட்டுழைத்தவர். சிவதர்ம ஸ்தாபனங்களுக்கும் நன்கொடை அளித்திருக்கின்றார்.

## புதியமுகாந்திரம்

முகாந்திரப்பட்டம்பெற்ற தமிழர்கள்— திரு. வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை, திரு. வேலுப்பிள்ளை மயில்வாகனம், திரு. குலசேகரம்பிள்ளை சபாநாதன். இவர்களில் முகாந்திரம் குலசபாநாதன் அவர்கள் வித்தியா பகுதியில் 22 வருடசேவைசெய்தபின் 1949-ம்ஆண்டு அரசாங்க பிரதமதமிழ் மொழிபெயர்ப்பாளர் பதவியினின்று இளைப்பாறினார். தற்போது இலங்கைச் சமாசாரப்பகுதியிலே பிரதம தமிழ் மொழிபெயர்ப்பாளராகப் பதவி வகித்துவருகின்றார். இவர் சிறந்த எழுத்தாளர். தமிழ்இலக்கியத்துறையிலும் பிரபலம்வாய்ந்தவர். இவர்களுக்கெல்லாம் நமது சோபனவாழ்த்துகள் உரித்தாகுக!

மறைந்து கிடக்கும்

## அருந்தமிழ் நூல்கள்

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

இவ்வாறுஅச்சேறி இறந்துபோகின்றனவும், புதிதாக அறிஞர் எழுதுவனவுமாகிய சிறந்த நூல்களை அச்சேற்றுவதற்குக் கூட்டுறவுமுறையில் ஒரு பதிப்பகம் இலங்கையில் ஏற்படுத்துதல் மிக இன்றியமையாதது. புத்தகப்பதிப்பினால் அதிக ஊதியங் கிடைக்கிறது. சென்னையிலே ஒருபங்கு 10 ரூபா வீதம் 5,000 பங்குகள் அடங்கிய 50,000 மூலதனங்கொண்ட ஒரு தமிழ்ப் பதிப்பகத்தை நான் அறிவேன். அப்பதிப்பகத்துக்கு ஆண்டு ஒன்றில் கடைவாடகை, சிப்பந்திச்செலவு, வருமானவரி, கட்டடவாடகை முதலிய எல்லாச் செலவுகளும்போக 50,(00 ரூபா வரையில் நிகரலாபம் கிடைக்கிறது. தனிப்பட்டவர்கள் புத்தகப்பதிப்புவேலையை நடத்துவதைவிடக் கூட்டுறவுமுறையில் நடத்துவதால் பல அனுகூலங்களுண்டு........

—"தினகரன்"

## அகிலஇலங்கைக் கல்விவாரம்

இந்தஆனிமாதம் 25-ந்திகதி முதல் 29-ந்திகதி வரையிலுள்ள ஓர்வாரமும் இவ்வாண்டின் கல்விவாரமாக அகில இலங்கை ஆசிரியர்கள் ஐக்கியசங்கத்தால் குறிக்கப்பட்டிருக்கிறது. "இலங்கைக்கான புதியகல்வி" என்பதே இவ்வாண்டின் பீடிகையாகும். பிரதம ஆசிரியர்கள்சங்கமும், பிரதமஆசிரியைகள்சங்கமும், அகில இலங்கை ஆசிரியர்கள் ஐக்கியசங்கமுஞ்சேர்ந்து நியமித்திருக்கும் கம்மிற்றியொன்று கல்விவாரத்தை நடத்திவைப்பதற்கான ஒழுங்குகளைச்செய்துவருகின்றது

## ஒருமுறையில் ஒருபோத்தல்

வருகிறஐப்பசிமாதமுதல் ஒருபோத்தல் சாராயம்அல்லது கள்ளுக்குமேல் எவருமே விலைக்கு வாங்கவோ, கொண்டுசெல்லவோ முடியாது. இப்போதோ இரண்டுபோத்தல்கள் வாங்கிக்கொண்டுசெல்ல அனுமதியுண்டு. ஆனால், விவாகங்கள், பிறகொண்டாட்டங்களுக்குத் தொகையானசாராயம் தேவைப்படுகிறவர்களுக்குப் பேர்மிற்றுகள் வழங்கப்படும். மதுபரிபாலன சட்டத்தின்கீழ் உள்நாட்டு மந்திரியால் செய்யப்பட்டுள்ள இப்புதிய பிரமாணங்கள் சென்ற வெள்ளிக்கிழமை வெளியான 'கெசற்'றில் பிரசித்தஞ் செய்யப்பட்டிருக்கின்றன.

## விதவை, அனாதர் பென்ஷன்

தென்மராட்சி ஆசிரியர்சங்கத்தின் விசேஷகூட்டமொன்று சென்றவாரம் சாவகச்சேரியில்நிகழ்ந்து, அதிலே சாவகச்சேரி இந்துக்கல்லூரித் தலைவரான திரு. ஏ. எஸ். கனகரத்தினம்அவர்கள் பேசியபோது, ஆசிரியர்களுக்கு விதவைகள், அனாதர்கள் பென்ஷன் வழங்குவது சீர்திருந்திய ஒவ்வோர் அரசாங்கத்தினதும் கடமையாகுமெனக் கூறலாயினர். அக்கூட்டத்தில் சமுகமளித்திருந்த சாவகச்சேரிப் பிரதிநிதியான திரு. வி. குமாரசாமி அவர்கள், அவர்கூறியதை ஆதரித்து இதுவிஷயமாகத் தம்முடைய முயற்சியெல்லாம் செய்வதாக வாக்களித்திருக்கின்றார்.

மலையாளத்து

## நவமான க்ஷேத்திரம்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மன்றாடும் பக்தர்குழாமும் நம்மைஉரைக்கவொண்ணு ஓர்விதஒப்பற்ற உணர்ச்சியினால் ஸ்தம்பிக்கச்செய்கின்றன. ஆ! அந்த மெழுகுவர்த்திகள்தான எத்தனைஎண்ண அலைகளை எம் மனத்தின்மீது மோதுவிக்கின்றன! தனக்கென்று சிறிதும் மீத்துவைக்காது முழுவதும் தன்அன்பருக்காக எரிந்துபோன அவளது பரித்தியாக வாழ்க்கையை அப்படியேபடம்பிடித்துக்காட்டுகின்றன அந்த எரியும்வர்த்திகள்! அப்புண்ணியவதி தன்வேதனையின்காலத்தில் ஒருசிறுதுண்டு மெழுகுவர்த்தி கிடையாது, அதனால் அனுபவித்த மனக்கிலேசத்தைத் தன் மனமுவந்து மன்னன் யேசுவின் பதமலராக அர்ப்பணித்த அருஞ்செயலுக்கு அவர் அனுப்பும்அன்பளிப்பின் அடைமானம் அவைகளே என்றாலும் மிகையாகாது. கொடையில்வெல்லப்படாத அவளது அன்பர் அம் மெழுகுவர்த்திகள்மூலம் சகோதரி அல்போன்ஸாவின் பக்தர்களுக்குப் பலவிதவரங்களை அளித்துவருகிறார்என்று நம்மிற்பலர் அனுபவத்தில் அறிந்துவருகிறார்கள்.

கல்லறையை நெருங்கியதும் செய்வதுஎன்னவென்று அறியாமலும், சொல்வது ஏதென்று உணராமலும், உணர்ச்சியற்று நின்றேன், என்னை அறியாது என்கால்கள் முழந்தாட்படியிட, கரங்கள்குவிந்தன. கடல்மடை திறந்தாற்போல் கண்கள் கண்ணீராற் சொரிந்தன. எனக்குத்தான் அவ்விதநூதன உணர்ச்சியோஎன்று ஐயுற்றுச் சுற்றிலும் ஏறெடுத்துநோக்க, என்னைச் சூழ்ந்துள்ள ஏனையோரிடத்தும் அதேஉணர்ச்சிகள் பிரதிபிம்பிக்கப்படுவதைக் கண்ணுற்றேன். சகோதரி அல்போன்ஸாவே அக்கல்லின்மீதிருந்து தன்பக்தர் ஒவ்வொருவருக்கும் தன்வாழ்க்கைவரலாற்றைக் கூறுவதுபோல் காணப்பட்டாள். எத்தனையோ ஆயிரம் ஆசைகளை அவளிடம்அளவளாவிச் சொல்லவேண்டும்போல் இருந்தது. ஆயினும் எடுத்துரைக்கும்சக்தியை இழந்தேன். உணர்ச்சிமேலிடப் பெற்ற தாயிடம் அர்த்தமற்ற தன்மழலைச்சொற்களால் தன்கருத்தை வெளியிடமுயலும் குழவிக்கொப்பாய் ஏதேதோ உளறி என்உள்ளக்கருத்தை அவளுக்கு அறிக்கையிட்டேன். எவ்வளவு நேரம் அவ்விதநிலையில் இருந்தேனே தெரியாது. ஊருக்குத் திரும்ப நேரமாயிற்றென்று பிறர்என்னைத் தட்டியெழுப்பக் குறைமனதோடு அவ்விடத்தை விட்டு அகன்றேன். உடல் மட்டுமே ஊரைநோக்கிப் புறப்பட்டதேதவிர என்மனமும், எண்ணமும் அப்புனிதவதியின் கல்லறையிலேயே உறைந்துவிட்டன. நம்பாரதத்தாய் மடியில் தவழ்ந்துவளர்ந்த ஓர்தவமாதைத் தேவன் இவ்வளவு மகிமைக்குயர்த்தச் சித்தம் கொண்டது பாரதமக்களாகிய நமக்கு ஓர்தனிப்பெருமை அன்றோ!

(ச-போ.)

## பாடசாலைக்கோணம்

A. 24-5-51-ல் வெளியான வேதவினாவிற்கு மிகவும் திருப்தியானவிடையனுப்பிய பின்வரும் மாணவர்க்கு ௳மது மனமுவந்த சோபனம் கூறுகின்றோம்.

1. ப. பெனடிற்—அர்ச். சவேரியார் கல்லூரி மன்னார். 2. ஸ்ரீ பிலோமினா பெஞ்சமின்; மே. இ. மரியாம்பிள்ளை; பே. மேரி பிலோமினா; பவுலீனம்மா பேதுருப்பிள்ளை; பி. மேரி பிறீம்—நாரந்தனை பெண்பாடசாலை. 3. தி. சூசை றேச்—திருஇருதயக் கல்லூரி கரவெட்டி. 4. ஸ்ரீ ஜேற்றாட் தொமிங்குப்பிள்ளை—நல்ல ஆயர்மடம் கண்டி. 5. ஸ்ரீ விறிசித் இராசையா — அர்ச். திரேசம்மாமடம் அச்சுவேலி. 6. ஸ்ரீ L. M. B. அந்திரேஸ்பிள்ளை—ஸ்ரான்லிகல்லூரியாழ்ப்பாணம 7. பா. அருளப்பு — பாப்பாமோட்டை. 8. நீ. றெஜீனா- மாவிலங்கேணி. விடைகளனுப்பியமற்றனைவோர்க்கும் நன்றிகூறுகின்றோம்.

B. விடையின் சுருக்கம்:

1. சுபாவமுறையிலே எனக்கும் எனது பிறசமய உடன் மாணவனுக்குமிடையில் யாதோர் வித்தியாசமுமில்லை.

2. சுபாவத்துக்கு மேலான முறையிலோ பாரதூரமான வித்தியாசங்களுண்டு. எனது தெய்வீகமீட்பராகிய யேசுக்கிறீஸ்துநாதர் வசனித்திருக்கிறபடி, நான் தேவனின் சுவீகாரப்பிள்ளை. தேவனும் அவரது சொத்துக்களும் எனக்குரியவை. மோட்சம் என்வீடு. தேவனின் தாய் என்னுடையதாய். அர்ச்சியசிஷ்டர்கள் என்சகோதரர்கள். தேவன் என்னில் வாசம் பண்ணுகிறார். சாவானபாவமில்லாதிருந்து கொண்டு நான்செய்யும் ஒவ்வொரு நற்கிரியையும் எனக்கு மோட்சத்துக்குரிய பலனைக் கொடுக்கக்கூடியவை. செபதபதான தருமங்களினாலும் தேவதிரவிய அனுமானங்களினாலும், என்னுள்ளத்தில் தேவசீவியத்தை நான் வளர்த்துப் பெருப்பிக்கலாம். இச்சீவியமுடிவில், நான் இவ்விடம் தேவனுக்காகச் செய்தவையும் அனுபவித்தவையுமான சகலமும் மோட்சமகிமையாய்மாறி என்னைச் சந்தோஷிப்பிக்கப் போகின்றன.

C. பின்வரும் வினாவிற்கு 30-6-51-க்கு முன் விடை அனுப்பப்படவேண்டும்.

வினா: ஆகையால், உமது பிறசமய மாணவி (வனு) க்கு மோட்சம் இல்லையா?

Rev. Fr. B. E. Alfred, O.M.I.
Bishop's House, Jaffna.

—கனடாதேசகடற்படைக்கென்று மேலும் பன்னிரு புதியபோர்க்கப்பல்கள் கட்டப்படவிருப்பதாய் அதன் பாதுகாப்புமந்திரியார் தெரிவித்திருக்கின்றார். இவற்றைக்கட்டிமுடிக்கவரும் செலவு ஆறுகோடி டலராகும். ஒன்பதுகோடியே 60 லட்சம் டலர் செலவிட்டு ஏற்கனவே 27 போர்க்கப்பல்கள் கட்டப்பட்டுவருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information. Service, COLOMBO.*

## அமெரிக்கா தயார் என்கிறர்

வாஷிங்ரன்

கோறியாப் போர்நிறுத்தத்தை முன்னிட்டு ஐ. நா. அங்கத்துவநாடுகளுடன் நெருங்கியமுறையில் ஆலோசனைநடத்துவதற்கு அமெரிக்கா இணங்குமென, இங்கு தூரகிழக்கு அமெரிக்க கொள்கைபற்றி நடக்கும் காங்கிரஸ் கூட்டுக்கம்மிற்றி விசாரணையின்போது, இராசாங்கமந்திரி அச்சிஸன் கூறினர். ஐ. நா. ஸ்தாபனத்தை எதிர்ப்பதன்மூலமாகவும், ஐ. நா. படைகளைஎதிர்த்துப் போராடுவதன்மூலமும் சீனக்கம்யூனிஸ்தர்கள் ஐ. நா. ஸ்தாபனத்தில் பிரவேசிக்கமுடியாது என்றும் அச்சிஸன்தெரிவித்தார்.

## ஒப்புக்கொள்ளுகிறர்கள்

நியூயோக்

ஷாங்காய்நகரிலே சென்றவைகாசி மாதத்தில் 529 பேரைச் "சதிகாரர்" என்ற காரணத்தின்பேரிலே தூக்கிலிட்டதாகச் சீனக் கம்யூனிஸ்தர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர் என்று 'நியூயோக் ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியாகியுள்ள ஹொங்கோங்செய்தி கூறுகிறது. ஒரேநாளில்மட்டும் அதாவது வைகாசி 31-ந் திகதிமட்டும், மொத்தமாக 218 பேர் தூக்கிலிடப்பட்டனராம்.

## வெட்டுக்கிளித் தொல்லை

வாஷிங்ரன்

இந்தியாவிலே இராஜபுதன மாகாணத்தில் வெட்டுக்கிளித்தொல்லை ஏற்பட்டிருக்கிறது. 75,000 மைல் பரப்பில் விளைநிலங்களுக்கு அதனுல் பயமுறுத்தல்ஏற்பட்டுள்ளது. இந்தத் தொல்லையைத்தீர்க்க அமெரிக்க நிபுணர்கள் ஆடிமாதம் 1-ந் திகதி தொடக்கம் செயலில்இறங்குவர். இந்தியாவுக்கு இந்தச்சகாயமானது, அமெரிக்க 4-ம் அம்சத் திட்டத்தின்படி அளிக்கப்படுகிறது. இந்தியாவும், அமெரிக்காவும் 4-ம் அம்ச சகாயத் திட்டஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றன. வெட்டுக்கிளிப் படையெடுப்புத்தொல்லை ஈருனிலும் இருக்கிறது. அங்கும் அமெரிக்கநிபுணர்கள் இந்தத் தொல்லையைக் களைந்துவருகின்றனர். இப்போது அங்கிருந்தே வெட்டுக்கிளி கொல்லிமருந்து தெளிக்கும்விமானங்கள் இந்தியாவுக்குப்போகும்.

## வாழ்க்கையும் இசையின்பமும்

இசைஇன்பம் பருகும்போது வாழ்க்கையில் மகிழ்ச்சி கனிகிறது. "சங்கீதத்தின்மூலம் வாழ்க்கைவளத்தைப் பெருக்குங்கள்" என்பதை அடிப்படையாகக்கொண்டு சென்ற வைகாசிமாதம் 6-ந் திகதிமுதல் 13-ந் திகதிவரை அமெரிக்காக்கண்டத்தில் சங்கீத வாரம் கொண்டாடப்பட்டது. சங்கீதவாரம இசை வளர்ச்சியையும், இசையில் ரசனைவளர்ச்சியையும் சாதிப்பதற்காகும். கடந்த 28 வருடங்களாக இந்தச்சங்கீதவாரம் கொண்டாடப்பட்டு வருகின்றது. 3,000 பெரிய, சிறியநகரங்களில் நடந்த இந்தக் கொண்டாட்டத்திலே இசைக்கழகங்கள், பாடசாலைகள், சினிமாஅரங்கங்கள், பொதுசனப் பொழுதுபோக்குக்கு வசதிசெய்யும்நிலையங்கள், மத ஸ்தாபனங்கள் ஆகியன கலந்துகொண்டன. சனதிபதி ட்றூமன் அவர்கள் "பியானே" வாத்தியம் வாசிப்பதில் பிரியர்என்பதையும், அன்னரின்குமாரத்தி செல்வி மார்கறெற் இசையுலகில் பிரபலமானவர் என்பதையும் ஈண்டு குறிப்பிடத் தேவையில்லை.

## யுத்தத்தைத் தடுக்கக்கூடும்

அத்திலாந்திக்நகர்

"மூன்ருவது மகாயுத்தத்தைத் தடுப்பதே ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தின் உடனடி நோக்கமாகும். உலக சுதந்திரநாடுகள் ஒன்ருய்நின்று, தங்கள் வல்லமையையும், ஒருமைப்பாட்டையும், ஒத்துழைப்பையும் செம்மையாகத்திரட்டிக் கொள்வார்களாகில், ஐ. நா. நோக்கம் சித்திபெறும்" என்று இங்கே சர்வதேச ரோட்டரிமகாநாட்டில் பேசியபோது, ஐ. நா. ஸ்தாபன அமெரிக்கதலைமைப் பிரதிநிதி வாறன் ஆர். ஆஸ்ரின் குறிப்பிட்டார். இந்த மகாநாட்டில் இலங்கை உட்படச் சுமார் 60 தேசங்கள் பங்குபற்றின. திரு. ஆஸ்ரின் மேலும கூறியதாவது:

சோவியற்அரசு போராற்றலை ஒருபுறம் வளரச்செய்துகொண்டே மறுபுறம் கம்யூனிஸ்தர்கள் போலிச்சமாதான விண்ணப்பங்களை நீட்டிக் கொண்டுவந்து மக்களிடம் கையெழுத்துக்கேட்கிருர்கள். இந்தப் போலிவேலைக்குச் சமாதானத்தின் சின்னமான வெண்புருவை அவர்கள் உபயோகிக்கிருர்கள். கம்யூனிஸ்த ஏகாதிபத்தியவாதிகள் விரும்பும்சமாதானம் எத்தகையது தெரியுமா? ஆட்டுக்குட்டியை விழுங்கிவிட்டு ஓநாய் திருப்தியுடன் ஏப்பம்விடுகிறதே, அந்த மாதிரி இறுதிச் "சமாதான"த்தை அவர்களும் நாடுகிருர்கள்.

## சமயங்களைத்தாக்கிப் பிரசாசம்

வாஷிங்ரன்

"மதம்என்பது வெறியூட்டும் மதுபானம். எல்லாச்சமயங்களும் அப்படித்தான்" — "இதை அடிப்படையாகக்கொண்டு ருஷிய கம்யூனிஸ்த ஆட்சியாளர் தீராப்பகையைப் பிரசாரம்செய்துவருகின்றனர். குறிப்பாக, சோவியற்மத்தியஆசியாவில் வதியும் முஸ்லீம்மக்கள்விஷயத்தில் கம்யூனிஸ்தர்களின் விஷப்பிரசாரம் மிகஅதிகமாயிருக்கிறது." இவ்வாறு "சோவியற் நாட்டில் நிலவும்நெருக்கடிகள்" என்ற தலைப்பில், அமெரிக்ககாங்கிரஸ் நூல்நிலையம் தொகுத்தளித்துள்ள 69 பக்கமுள்ளதிரட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஆராய்ச்சியறிக்கை சோவியற்அரசின் மதத்துவேஷப் போக்கை விரிவாகஎடுத்துக்கூறுகிறது. பௌத்தமதம்போன்ற சமயங்களையும் கம்யூனிஸ்தர்கள் எதிர்ப்பிரசாரம்செய்கின்றனர். மக்களின் மதப்பற்று கம்யூனிஸ்தர்களுக்குப் பெருந் தலைவலியாயிருக்கிறது.

## 18 லட்சம் தோன் தானியம்

வாஷிங்ரன்

பாதுகாப்பில்வைத்திருந்த 21 சரக்கேற்றியகப்பல்களிலே இப்போது அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு உணவுதானியம் போய்க்கொண்டிருக்கிறது. இந்திய அரசாங்கம் இந்நாட்டில் மிகமலிவாகவாங்கியுள்ள கோதுமை, மா, மைலோப்பண்டங்களை முன்சொன்ன 21 கப்பல்களிலும் 7 கப்பல்கள் ஏற்கனவே இந்தியாகொண்டுபோய்ச் சேர்த்துவிட்டன. ஏனைய கப்பல்கள் இம்மாதத்துக்குள் சரக்கேற்றிச்செல்லும். 21-வது கப்பல் ஆடி 10-ந் திகதி அமெரிக்காவிலிருந்து புறப்படும். ஒவ்வொரு கப்பலும் 9,600 தொன்தானியம் ஏற்றிச்செல்லுகிறது. 21 கப்பல்களும் இந்தியா போய்ச்சேர்ந்தபிறகு கணக்குப்பார்த்தால், இரண்டுலட்சம் தொன்களுக்கு மேல் உணவுதானியம் கரைமாறியிருப்பது புலனுகும். வருகிற ஆடி 31-ந் திகதியுடன்முடிகின்ற கடந்த 13மாதங்களிலும் இந்தியா வாங்கியுள்ள — வாங்குகிற 20,50,000 தொன் உணவு தானியத்தில் கப்பலேற்றியதுபோக எஞ்சியுள்ளதை எடுத்துச்செல்ல இதே 21 கப்பல்கள் தயாராகுமெனத் தெரிகிறது. மேலும் அமெரிக்கா 20 லட்சம்தொன் தானியம்வாங்கப் 19 கோடி டலர் கடன்கொடுத்து இந்தியாவுக்கு உதவவிருக்கும் உணவு தானியத்தை ஏற்றிச்செல்ல இன்னும் 100 கப்பல்கள் "இருப்பிலிருந்து" எடுக்கப்பெறுமாம்.

## ஒருபோதும் தலையெடுக்காது

நியூயோக்

சுதந்திரசிந்தனையும், அபிப்பிராய பரிவர்த்தனையும் உள்ள இடங்களில் கம்யூனிஸம் ஒருபோதும் தலையெடுக்கவே முடியாதுஎன்று செனற்றர் மெக்மெஹான் கருதுகிருர். இங்கு அமெரிக்கமாஜி போர்வீரர்கள்கூட்டமொன்றில் பேசுங்கால், அவர் இவ்வாறு தமதுகருத்தைவிளக்கி மேலும் குறிப்பிட்டதாவது: "இரும்புத்திரையைக் கிழித்துக்கொண்டு ருஷியமகாசனங்களுக்கு உண்மையைஎடுத்துச்சொல்லும் உன்னதஇயக்கத்தில் நீங்கள் சேருங்கள். நாஸிகளைஎதிர்த்து வீரதீர பராக்கிரமத்துடன் போராடிய ருஷியபோர்வீரர்கள் மீண்டும் உங்களைச் சந்தித்துஉறவாட அனுமதிக்குமாறு ஸ்ராலினுக்குச் சவால்விடுங்கள். அடிக்கடி அவ்வாறுசெய்யுங்கள். அவ்வாறே நமதுதொழிற்சங்கங்களும், ருஷியதொழிலாளரையும், தொழில்நுட்ப சிப்பந்திகளையும் இந்நாட்டிற்கு வந்து அமெரிக்கதொழிலாளர் எவ்வாறு வாழ்க்கைத்தரஉயர்வு பெற்றுள்ளனர்? எவ்வாறு அமெரிக்கதொழிலாளர்குடும்பங்கள் சொந்த மோட்டார் கார்களும், ஏனைய நூதனசாதனங்களும் பெற்றுள்ளனஎன்பதைக் கண்ணுரத்தெரிந்துகொள்ள வழிவிடும்படி ஸ்ராலினைவற்புறுத்திச் சவால்கள் விடுத்தவண்ணம் இருக்கவேண்டும்.

(யூஸிஸ்)

## மரியம்மாவின் மரணம்

மானிப்பாயிலே பலராலும் அறியப்பட்டவரும், இற்றைக்கு 35 ஆண்டுகளுக்குமுன் பலவருடகாலம் மானிப்பாய், சந்தானமாதாகோவிலில் சக்கிறிஸ்தாமாயிருந்து காலஞ்சென்ற திரு. வி. பிலிப்புப்பிள்ளையின் பௌத்திரியும், தற்போது அக்கோவில் சக்கிறிஸ்தாமாய் இருந்துவரும் திரு. பி. விசேந்தியின் பெருமகளும், றெயில்வேக் காட்டாயிருந்து இளைப்பாறியிருப்பவரான திரு. பிலிப்பு மனவல் பிள்ளையின் ஏகபுதல்வியும், பிரபலவியாபாரியார் திரு. செல்லையா மரியாம்பிள்ளையின் பாரியாரும், மற்றும் வியாபாரிகளான ஆசீர்வாதம், வஸ்தியாம்பிள்ளை, ஞானப்பிரகாசம், செல்வராஸ், யேசுரட்ணம் ஆகியஜவரினதும் ஏகசகோதரியும், போயிட்டி அர்ச். லூர்துமாதா கோவிலின் சக்கிறிஸ்தாமின் பெருமகளுமான தங்கரட்ணம் மரியம்மா சிலமாதம் நோய்வாய்ப்பட்டிருந்து கடந்த 8-6-1951 வெள்ளிக்கிழமை இரவு தனது ஆன்மாவைப் படைத்தோன் கரங்களில் ஒப்படைத்தார். மரிக்கும்போது 29 வயசு. இவவுக்கு ஓர் புத்திரியுமுண்டு. இவவின் பிரேதமானது மறுநாள் திரளான மக்கள் கூடியசமுகத்திலே வண. அன்ரன் இராசகாரியர் சுவாமியார் துக்கசங்கீதம்பாடிக் கடைசி ஆசீர்வாதம்கூறிநிற்க, அடக்கம் பண்ணப்பட்டது. இவவை இழந்துதுன்புறுகின்ற பெற்ருர், நாயகன், புத்திரி, சகோதரர், மைத்துனிகள், மற்றுமுள்ள இனசனருடன் நானும் அனுதாபப்படுகின்றேன்

R. I. P.

---

—பிறேசில்தேச றையோடிஜனேய்ரே நகரிலே கத்தோலிக்க சேவாஸ்தாபனங்களுக்கும், மற்றுஞ் சபைகளுக்குமாக அடுத்தஇரு ஆண்டுகளுக்கிடையிலே நான்குலட்சம்பவுண்வரையில் செலவிட்டு 24 மாடிகளையுடைய ஓர்பிரமாண்டமான கட்டடம் அமைக்கப்படவிருக்கிறது. ஆயிரம்பேர் அமரக்கூடிய ஓர்மண்டபத்தையும் அது கொண்டதாயிருக்கும்.

---

## லங்கா ஆயுர்வேத சித்தவைத்திய கலாசாலை வருடாந்தப்பரீக்ஷை முடிவு

வட இலங்கைச் சுதேச வைத்திய சபையார் 1951-ம் ஆண்டு பங்குனி மாதம் நடந்த வருடாந்தப் பரீக்ஷையில் கீழ்வரும் சித்தியடைந்தமாணவர்களின் பெயர்களைத் தராதர ஒழுங்கின்படி வெளியிட்டிருக்கிருர்கள்.

### விசேட வகுப்பு

| | | |
|---|---|---|
| 1. | எம். சுவாமிநாதன் | 3-ம் பிரிவு |

### நாலாம் வருடம்

| | | |
|---|---|---|
| 1. | என். இரத்தினசபாபதி | 2-ம் பிரிவு |
| 2. | எஸ். வேலும்மயிலும் | ,, |
| 3. | பி. கணபதிப்பிள்ளை | 3-ம் பிரிவு |
| 4. | ஜி. ஜோஜ் | ,, |
| 5. | வி. சிவப்பிரகாசம் | ,, |
| 6. | ஏ. நல்லையா | ,, |
| 7. | கே. நமசிவாயம் | ,, |

### மூன்ரும் வருடம்

| | | |
|---|---|---|
| 1. | என். இரத்தினசபாபதி | 2-ம் பிரிவு |
| 2. | கே. கணபதிப்பிள்ளை | ,, |
| 3. | எஸ். வேலும்மயிலும் | 3-ம் பிரிவு |
| 4. | கே. நமசிவாயம் | ,, |
| 5. | பி. கணபதிப்பிள்ளை | ,, |
| 6. | ஜி. ஜோஜ் | ,, |
| 7. | ரி. தம்பிஐயா | ,, |
| 8. | எஸ். குணரத்தினம் | ,, |

### இரண்டாம் வருடம்

ஒருவருமில்லை

### முதலாம் வருடம்

| | | |
|---|---|---|
| 1. | ஜி. சிவப்பிரகாசம் | 3-ம் பிரிவு |
| 2. | எஸ். கந்தையா | ,, |

---

## மரணசங்கதி

காவலூர் வாசரும், கோடியற்புதரின் கோவிலைச்சேர்ந்தவரும், பலராலும் நன்கறியப்பட்டவரும் சத்தியவேத பாதுகாவலன்கடிதரும், சந்தாதாருமான திரு. எஸ். திரீத்துவசாமிஅவர்கள் சிலகாலம் நோய்வாய்ப்பட்டுக் குணமுருது அந்தியதேவதிரவிய அனுமானங்களைக் குறைவறப்பெற்று மரணத்திரையில் மறையலாயினர். மரிக்கும்போது இவருக்குவயது 62. கொழும்புத்துறைமுக ஹாபர் எஞ்சினியறிங்பகுதியில் கிளாக்காயிருக்கும் திரு. சூசைப்பிள்ளை அவர்கள் இவரின் புதல்வர். கொழும்புத்துறைமுக மாஸ்றர் அற்றென்டன்ற் பகுதியைச்சேர்ந்த சம்சன்என்னும் கப்பலில் கப்பிருய் இருப்பவரான திரு. எ. எவ். லோறன்ஸ் அவர்கள் இவரின் மருகர். கொழும்புப் பிறிமியர் ஐக்கியசங்க கந்தோரில் ஓடிற்றராய் இருக்குந் திரு. தானியேல் அவர்கள் இவரின்மைத்துனர். இவரின் பிரேதமானது மறுநாட்சாயந்தரம் அழகியபேழையில் வைக்கப்பெற்று, திரளான இனசனர் சிநேகிதர் புடைசூழ, வண. பி. பொன்னையாசுவாமியார் துக்கசங்கீதம்பாடிக் கடைசிஆசீர்வாதம் கூறிநிற்க, சேமக்காலையில் நல்லடக்கஞ் செய்யப்படலாயிற்று. இவரை இழந்து துன்புறும் மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் இனசனரோடு யானும் அனுதாபப்படுகிறேன். இவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு தயவாய் வேண்டுகின்றேன்.

R. I. P.

—கடிதர்.

---

—புதியடில்லிநகரிலே ஓர்அகிலஇந்திய சனநாயக எழுத்தாளர்சங்கத்தை ஆக்குவதற்கான தீர்மானம்ஒன்று, அங்கு சமீபத்தில்கூடிய யுவஎழுத்தாளர்கூட்டத்தில் செய்யப்பட்டிருக்கிறது. இந்தச்சங்கம் இந்தியாவிலே கம்யூனிஸ்தஆதிக்கத்திலுள்ள முன்னேற்ற எழுத்தாளர்சங்கத்தை எதிர்த்துப் போட்டியிடும்வரையில் ஆக்கிவைக்கப்படவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளுக்கு என்ன செலவு?

( முன்தொடர்ச்சி )

நான்குவயதிலே கொடுக்கலாம். ஆனால், ஐந்து அல்லது ஆறுவயதாயிருப்பது நல்லது. தொடக்கத்திலே ஒரு ஆறுவயதுப்பிள்ளைக்கு ஒரு கிழமையில் பத்துச்சதம் கொடுத்துப்பார்க்கலாம். அத்தொகையைக்கொண்டு இரண்டுசதத்திற்கு இனிப்பும், மூன்று சதத்திற்குக் கடலையும், ஐந்து சதத்திற்குச் சொக்கிளேற்றும் பையன் வாங்குவானுக்கும். வயது போகப் போக, பாடசாலைத் தேவைகளுக்குரிய காசும் இசசெலவுத்திட்டத்தில் சேரலாம். எட்டாம், ஒன்பதாம வகுப்பு மாணவனுக்குக் கொடுக்கும் பணம், அவன் இடையில் போகவேண்டிய உல்லாசப்பிரயாணச்செலவு, சிநேகிதருடன் ஒரு 'ரீப்பாட்டி,' கல்வியறிவுக்குரிய படம்பார்க்குஞ்செலவு முதலியவற்றிற்குப் போதுமானதாயிருப்பது அவசியம்.

எவ்வளவு கொடுக்கவேணும்? ஐந்து அல்லது ஆறுவயதிற் காசுகொடுக்கத் தொடங்குவதாயிருந்தால், ஒரு கிழமைக்கு ஐந்துசதம் கொடுத்து ஆரம்பிக்கலாம். அதை வைத்துக்கொண்டு பிள்ளையாண்டான் அக்கிழமையில் என்னசெலவு செய்யலாமென்று யோசித்துத் திட்டம்போட வசதியிருக்கும். இத்தொகை வயதுடன் அதிகரிக்கிறது நலம். ஒவ்வொரு பிறந்ததினத்திலிருந்து பிள்ளையின்செலவுத் தொகையைக்கூட்டிக்கொடுப்பதுநலம்.

சற்றேவளர்ந்தவர்களுக்கு இவ்வளவென்று வரையறுக்கமுடியாது. ஆயினும் குடும்பவருமானம், சீவியநிலைபரம், பிள்ளையின் அத்தியாவசியமானசெலவு, பிரயாணச்செலவு, அவனுக்குத்தேவையான உடுப்பு முதலாம் காரியங்கள், அவன் ஏதெதுவாங்கலாம் என்று செய்திருக்கும்முடிபு, பொடியனின் கெட்டித்தனம் முதலியகாரணங்கள் ஆகியன பிள்ளைக்குக் கொடுக்கவேண்டிய தொகையை எல்லைப்படுத்தும். அவனுக்கு வயதுவந்து அறிவு அதிகரிக்குமுன் அவன் தலையில் ஏன் பளுவானபாரத்தைச் சுமத்தவேண்டும்?

இந்தச்செலவுக்காசு எப்பொழுது கொடுக்கவேண்டும்? ஒரு கிழமைக்கொருமுறை கொடுத்தல்நல்லது. சிறு பிள்ளைகளுக்குக் கிழமைக்குஇருமுறை கொடுத்தல்நலம். வளர்ந்தவர்கள் இரண்டுகிழமைக்கு ஒருமுறையோ அன்றேல் மாசம் ஒரு முறையோ மாத்திரம் காசுபெற்றுக்கொள்ள விரும்புவார்கள். என்ன தவணையானாலும் ஒழுங்காய்க் குறித்ததொகையைக் கொடுத்துவிடவேண்டும். இதில்தான், அதாவது குறிக்கப்பட்டகாலத்தில் கொடுக்கப்பட்டதொகையைச் செலவழிக்கப் பழகுகிறதுதான் அவர்கள் அவசியம் அடையவேண்டியபயிற்சி. ஒரு சிறுகுறிப்பு: காசு கொடுக்கும்பொழுது சொற்பசில்லறையும் கொடுப்பதுநல்லது. ஏனெனில், தேவையான சில்லறை கையிலில்லாவிடில் அதைப் பெற்றோரிடமே கேட்கநினைப்பார்கள்.

பிள்ளைகள் செலவுசெய்யும்விதத்தை நாம கண்காணிப்பது எப்படி? கண்காணிப்பு மிகவும் அருந்தலாக இருக்கவேண்டியது. சிலவேளைகளில் தேவையில்லாத செலவுகள்வரும். அதைக் காண மனவருத்தமாயிருக்கும். ஆயினும ஆகக்குறைவான கணகாணிப்புத்தான் பயிற்சிக்குஉதவும். தனக்குக் கொடுக்கப்பட்ட தொகைக்குள் தன் செலவுகள் அடங்கவேணடுமென்று உன்பிள்ளை உணர்ந்து அனுபவம் அடைந்துகொள்ளவேணும். செய்யவேண்டிய செலவுயாதென்று அவனுக்கு அறிவித்துவிடு. மிகுதியாயிருக்கும் சிறுதொகையை எப்படிச் செலவழிப்பதென்று அவன் தானே தீர்மானித்துக் கொள்ளட்டும். தீர்மானித்ததுகொண்டு தன்புத்தியைப்பாவித்துச் செலவழிக்கட்டும். இடைக்கிடை அதைப்பற்றிபுத்திமதிகூறிவாவேணும்.

கொடுத்ததொகைக்கு மேலதிகமாகச்செலவழிப்பதைத் தடுக்கவேண்டுமா? ஆமாம். ஆனால், சற்றுயோசனையுடன் தான். சாதாரணமாய்ப் பிள்ளைக்குக் கொடுத்ததொகையுடன் நிறுத்திக்கொள். மேலதிகமாகக் கொடுக்கப்படாது. ஆரம்பத்தில் மேலதிகமான செலவுவந்தால், உதவுவதா? அல்லது அப்படியேவிட்டுப் பாடம் படித்துக்கொள்ளச் செய்வதா? என்பதை யோசித்துத் தீர்மானித்துக் கொள். மற்றப்படி பிள்ளைகளுக்குப் புதிய செலவுக்காரணங்கள் இடையிடையேவருவதுசகசம் இத்தருணங்களில மேற்சொன்ன ஒழுங்கைத் தளர்த்திவிட வேணடியிருக்கும். ஆயினும் அது இடைசுகமமாத்திரமே.

"அடுத்ததெருவில் அழகராசா அதிகமாய்ச் செலவழிக்கிறான்" என்ற முணங்கல்வரக்கூடும். அதற்கு மறுமொழிசொல்லுவது ஒருபெரிய பிரச்சினை. அழகராசாவின் செலவுத்தொகையையும், திட்டத்தையும் முதல் அறியவேணும். சிலவேளை தனக்குத் தேவையான சகலத்தையும் தானே வாங்கிக்கொள்ளுவதனால் அதிகம்செலவழிப்பதாகக் காணக்கூடும். நீயும் உன்பிள்ளைக்கு மேலதிகமானபணம் கொடுக்கமுடியாவிட்டாலும் நீ அவனுக்குச் செலவழிக்கவேண்டிய பணத்தை அவனே செலவழிக்கவிடுவதனால் "நான் இளைத்தவனே" என்ற அந்த மனப்பான்மைஒழிந்துபோகும். தனது செலவுக்குக் குறைவானபணத்தொகை கிடைப்பதின் நியாயத்தை உன்பிள்ளை உணரப்பண்ணுமாறு வீட்டுச்செலவுத் திட்டத்தை உங்கள் கொடுக்கல்வாங்கல்களின் விபரத்தை அவனும்அறியச் செய்வதுநன்று.

போதியவயதாயிருந்தால் மேலதிக செலவுக்கு அதிக "வேலைசெய்து உழைக்க"ப்பழக்கு. அல்லது பிறத்தியாரைக் கொண்டு செய்விக்கிறவேலையை அவனைக்கொண்டு செய்வித்து உழைக்கப் பண்ணு. இன்னொருவர் செலவழிப்பதைப்போலல்ல; வருவாய்க்குத்தக்கபடிதான் செலவு செய்யலாமென்று அவன் உணரப்பண்ணவேணும்.

பிள்ளைகளுடைய செலவுக்குக்காசு கொடுப்பது அவர்களைக் கெடுக்கும்வழியென்று எண்ணாதே. அது அவன் அறியவேண்டிய அவசியகல்வி. வளர்ந்தபின் அவன் அனுசரிக்கவிருக்கும் கட்டுமட்டுக்கு ஒரு ஆயத்தமென்றே கொள்ளுதல் அவசியம்.

---

— நீடிக்கச்செய்துவிடப்பெற்ற பரிசுத்தவருடமானது, 1917-ம் ஆண்டு பாத்திமாமாதாவின் செய்திசம்பந்தமாக அர்ப்பணஞ் செய்யப்பட்டுள்ள சர்வதேசமகாநாடு நிகழும்போது வருகிற ஐப்பசிமாதம் 13-ந் திகதியன்று பாத்திமாபதியில் உத்தியோகமுறையில் முடிவாகுமென்று பாப்பரசரின் காரியதரிசி அறிவித்திருக்கின்றார் உத்தியோகமுறையில் அன்றுதினம் அது முடிவானபோதிலும் வருகிறகிறிஸ்மஸ் விழாவிற்கு முதனாள்வரையில் அது நீடித்திருக்கும்.

—உலகப்பிரசித்திபெற்ற வத்திக்கான் நூல்நிலையத்தில் அடங்கியவைகளை "மைக்கிரோபிலம்" என்ற சலனபடம்பிடிப்பதற்கென்று அமெரிக்கஐக்கியதேச சென் லூயிஸ்நகரிலுள்ள யேசுசபைச் சர்வகலாசாலையைச்சேர்ந்த திரு. லோறிடனிஅவர்கள் ஒர்திட்டஞ்செய்திருக்கின்றார். 53,000 பவுணவரையிலே இதற்குச் செலவாகும். சலனபடம்பிடித்துமுடிக்கப் பதினைந்துமாதங்கள் செல்லும். 41,000 கையெழுத்துப் பிரதிகளும் படம்பிடிக்கப்படும்.

---

கோடி அற்புதர் — பதுவை

## அர்ச். அந்தோனியார் சரித்திரம்

ஆதிலர்க் கன்னதாதாவாகவும், துயருற்றோர் துன்பந்துடைக்கும் துணைவராகவும் விளங்கும் அர்ச். அந்தோனியாரின் உண்மையான வரலாற்றைப் பல நூல்களின் துணைகொண்டு சுருக்கமாகவும் விளக்கமாகவும் இலகுவான தமிழிற் கூறும் நூல். பள்ளியிற்பயிலும் மாணவர்க்கும் மற்றோர்க்கும் கைக்கு அணிகலமாக விளங்கும் சிறப்பானமுறையில் பதிப்பிக்கப்பட்டது.

செபங்கள், மன்றாட்டுக்கள், பிரார்த்தனைகள்
என்பனவும் அடங்கியுள்ளன.

பிரதி ஒன்றின் விலை சதம் 75

(தபாலில் வேண்டுவோர் ரூ. 1-க்குப் போஸ்டல்ஓடர் அனுப்புக.)

அர்ச். பிலோமினு அச்சகம்,
102, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

---

# உலக யுத்தம் மூளுமா?

மூன்றாவது உலகயுத்தத்தை இப்பொழுது எல்லாத்தேசங்களுமே எதிர்பார்க்கின்றன. எந்தஇடத்தில் யுத்தம் தோன்றப்போகிறதென்பதேஇன்றைய பிரச்சினையாகும். இதுவரை எதிர்பார்த்து வந்ததுபோலன்றி இப்பொழுது புதியமுறையில் யுத்தப்பிரச்சினை தோன்றியிருக்கிறது. கோறியாப் போரில் உலகமகாயுத்தம் தோன்றச் சந்தர்ப்பம்இருந்தது. ஆனால், தோன்றவில்லை. கீழ்த்திசைநாடுகளில் தோன்றலாமென எதிர்பார்க்கப்பட்டது. அதுவும் இன்னும் சந்தேகத்துக்கு இடமாகத்தான் இருக்கின்றது. இருந்தபோதிலும் ஈரானில் (பார்சிகம்) ஏன் உலகயுத்தம் தோற்றக்கூடாதென்ற கேள்வி எழுகின்றது.

ஈரானை ஏன் யுத்தகேந்திரமாகக் கொள்ளவேண்டும். யுத்தமென்றால் அதற்கு எத்தனையோ சாதனங்கள் வேண்டும். அவற்றில் முக்கியமானது பெற்றோல்எண்ணெய். நவீன யுத்தசாதனத்தைக்கொண்டு நடைபெறும் எந்தயுத்தத்திற்கும் எண்ணெய் இன்றியமையாத மூலப்பொருள். இந்த மூலப்பொருள் ஈரானில்இருப்பதுதான் யுத்தப்புகைச்சலுக்குக் காரணம். அங்கிருக்கும்எண்ணெயைப் பங்குபோட்டுக்கொள்வதில் 1946-ல் ஒரு புதிய உடன்படிக்கை ஏற்பட்டது. இரண்டாவது உலகமகாயுத்தத்தில் நேசநாடுகளாயிருந்த பிரித்தானி, அமெரிக்கா, ருஷியாமுதலிய நாடுகளுக்குமிடையே ஒருஉடன்படிக்கைஏற்பட்டது. இதன்பயனாய் ருஷியாவுக்கும் எண்ணெய்கிடைக்க ஆரம்பித்தது. ஆனால், முழுவதையும் அனுபவித்துக் கொண்டிருந்த பிரித்தானியின்சலுகையிலே கொஞ்சம்குறைய ஆரம்பித்தது. அங்குகிடைக்கும எண்ணெய்முழுவதும் ருஷியாவுக்குக் கிடைத்தால் ருஷியா முதல்தர வல்லரசாவது நிச்சயம். ஆனால், அதுமுன்னேறுவதை அமெரிக்காவும், பிரித்தானியும்விரும்பாதது ஆச்சரியமன்று. ஆதலால், ஈரான்எண்ணெய்த் தகராறு உலகயுத்தமாய்மாறினால் அதனை எதிர்பார்க்கப்பட்டதாகத்தான் கொள்ளவேண்டும். கடந்த இரண்டுமூன்றுமாதகாலமாக ஈரான் எண்ணெயைப்பற்றி எழுதாதபத்திரிகைகளோ உலகில்இல்லை. அத்துணை முக்கியம்வாய்ந்த இப்பிரச்சினையை ஆராய்வது நலமாகும்.

தொழில்களைத் தேசீயமயமாக்கும் பாதையில் உலகத்திலுள்ள சகலதேசங்களுக்கும் வழிகாட்டியது ருஷியாவே. ஐந்துவருடத்திட்டத்திலே தேசீயமயமாக்கும் அதன்முயற்சி வெற்றிபெற்றது. அதிலிருந்து தேசீயமயமாக்கும் பிரச்சினை உலகமுழுவதும் பரவிவிட்டது. அது ஈரானிலும்தோன்றியது இயற்கையே. அதன் முக்கியமான செல்வம் பெற்றோலேயாகும். உலக உற்பத்தியிலே காற்பங்குக்குமேல் அங்கு உற்பத்தியாகிறது. எங்கே எந்தச்செல்வம்இருந்தாலும் அதைப் பயன்படுத்திக்கொள்ளப் பிரித்தானி தவறியதில்லை. இதில்ஈரானும் உட்பட்டதுதான். 1901-ம் ஆண்டு பிரித்தானி எண்ணெய்உற்பத்திக்கு அங்குவசதி செய்துகொண்டது. முந்தமுந்த வில்லியம்நொக்ஸ் என்ற பிரித்தானியர் ஈரான்மன்னருடன் உடன்படிக்கை செய்துகொண்டார். வருடமொன்றுக்கு 40,000 பவுண் ஈரானுக்குக் கொடுத்துவிட்டு எண்ணெயைத் தங்கள்செலவில் உற்பத்திசெய்தார். 1909-ம்ஆண்டு இந்தஎண்ணெய் உற்பத்தி ஓர்கம்பெனி நிர்வாகத்தின்கீழ் வந்தது. அதற்கு ஆங்கிலோ-ஈரான் எண்ணெய்க்கம்பெனி என்று பெயர். இந்தக்கம்பெனி 60 வருடம்வரை எண்ணெய்எடுத்துக்கொள்ள ஈரான்சம்மதித்தது. ஆனால், எண்ணெய்த் தொழிலைத் தேசீயமயமாக்க வேண்டுமென்ற பிரச்சினை ஈரான்பிரதிநிதிகள் சபைக்குவந்தது. இந்தப்பிரச்சினையை அப்போதைய பிரதிநிதிகள்சபை நிராகரித்துவிட்டது. அதிலிருந்து நாட்டில் குழப்பம் ஏற்பட்டது.

தேசீயமயமாக்கும் பிரச்சினையைப் பொதுமக்களின் முன்னிலையில் கொண்டுவந்தது டியுற்றான்ற அரசியற்கட்சியே. இந்தக்கட்சிக்கு ருஷியாவின் ஆதரவு இருக்கிறதென்றவதந்தியை எவரும மறுக்கமுடியாது. தேசீயமயமாக்கும் பிரச்சினையைப்பிரித்தானிமுதலில் வெகுவாகப் பாராட்டவில்லை. ஆனால், சென்ற பங்குனி மாதம் 7-ந் திகதியன்று ஈரானின் பிரதமர் சுடப்பட்டபிறகே அதற்குத் தலைவலி ஆரம்பமானதெனலாம. ஈரானின் செல்வத்தை அந்நியர் கொள்ளையடித்துக் கொண்டு போகிறார்கள்; பார்சீகர்கள் வறுமையில்மூழ்கியிருக்க வேணடியிருக்கிறதென்றுகூறி அத்தொழிலைத் தேசீயமயமாக்க வேண்டுமென்று டியுற்றாகட்சி கூறியது. பிரித்தானி இதுநாள்வரை இக்கம்பெனியின் நிர்வாகத்திலும், உயர்ந்தபதவியிலும் ஈரானியரைச் சேர்த்துக்கொள்ளாததையும் அவர்களுக்குத் தொழில்நுணுக்கப்பயிற்சியளிக்கத் தவறியதையும் டியுற்றாகட்சி நன்கு பயன்படுத்திக் கொண்டது. பொதுமக்களும் இந்த உண்மையை உணர ஆரம்பித்தார்கள். கலகம் ஒருஎல்லையிலிருந்துமறுஎல்லைக்குத் தாண்டியது. இந்தக்கலகத்தினால் எண்ணெய்த்தொழிலை உடனடியாகத் தேசீயமயமாக்க வேண்டுமென்ற தீர்மானம் பாராளுமன்றத்தில் நிறைவேறியது. பார்சீகமன்னரும் சம்மதம் கொடுத்துவிட்டார். எண்ணெய்த் தொழிலைக் கைப்பற்ற உத்தரவிடப்பட்டது. இதிலிருந்து பிரித்தானிக்கும், ஈரானுக்குமிடையே தகராறு ஏற்பட்டது. இந்தத்தகராறும் உலக அமைதிக்கு எப்படிபாதகம் விளைவிக்கக்கூடுமென்பதை இனித்தான் பார்க்கவேண்டும். —ஈழகேசரி.

---

## பெரிய குறிப்பிடம்

விற்பனைக்குத்
தயாராயிருக்கிறது.

பிரதி விலை சதம் 30.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BEST
CROWN BRAND
TILES
IMPORTER & STOCKIST :—
MRS. EMMANUEL TIRUCHELVAM
"TIRUCHELVAM BUILDINGS"
MAIN STREET, JAFFNA.
INDIAN BRICKS & FLOORING TILES
ALSO AVAILABLE.
T'gram: Tirchelvam. T'phone: 52.

... பிரச்சினை தீர்ந்தது






லெக்டோஜனை நாம் கண்டுபிடித்ததுமுதல் உணவூட்டுவது இனிமேலும்ஓர்பிரச்சினைஅல்ல. குழந்தை அதை நேசிக்கிறது. அத்துணை இலகுவாக அதுசீரணமாகிறது....அத்துடன் நல்ல போஷணையும் அளிக்கிறது. இப்போது...குழந்தை எப்போதும் திருப்தியாயிருக்கிறது. லெக்டோஜனை நாம் கண்டுபிடித்தது முதல் நமது குழந்தையைப் போஷிக்க எதையும் சிந்திக்கப்படாது. ஆம், எங்குமுள்ள தாய்மார் எல்லோருமே அப்படியே சொல்லுகிறார்கள். அதனல் பூரணசுகத்தை வேண்டி உங்கள் குழந்தையை லெக்டோஜன்கொண்டு உணவூட்டுங்கள்.

லெக்டோஜன்

உலகத்திலுள்ள குழந்தைகளின் உணவு

Mal. No. 492. Eng.

## சீனச்சக்கிரவர்த்தி குயினைல் எவ்விதம்காப்பாற்றப்பட்டார்?

(சீனவிலே ஓர் மிஷனரியாகவிருந்த பொண்ரனி சுவாமியாரிடமிருந்து பிரான்சிய மன்னரின் ஆத்துமகுருவாயிருந்த டேலா செயிஸ் சுவாமியாருக்கு அனுப்பப்பட்ட ஓர் கடிதத்திலிருந்து அனுவதிக்கப்பட்டது.)

ரிசியன்-சோ, 15, மாசி 1703

... 1629-ம் ஆண்டின் இறுதியிலே விஸ்தேலு சுவாமியாரும், நானும் கன்ரன்நகரிலிருந்து திரும்பினேம். நாங்கள் வந்துசேர்ந்தபோது சக்கிரவர்த்தி நோய்வாய்ப்பட்டிருந்தார். கடந்த இருவருடமாக அவர் ஐரோப்பியமருந்துகள்மட்டிலே—விசேஷமாய் ஏழைகள்மத்தியில் கொடுக்குமாறு பிரான்சியமன்னர் காரணமாயிருக்க உதவிய வில்லைகள்மட்டிலே மிகுந்த கரிசனை காண்பித்தார். இந்தமருந்துகள் கொண்டு என்னென்னநோய்கள் குணமாக்கக்கூடுமென்று நாங்கள் சக்கிரவர்த்திக்கு எடுத்துக்கூறினேம். அவற்றிலும் அந்தவில்லைகள் அத்துணை தீவிரமாகவும், பெருந்திறமையாகவும் குணஞ்செய்தன. ஏலவே மரணத்தின் வாயிலில் இருந்தவர்களும், நம்பிக்கை முற்றுகஅற்று ஏற்கனவே கைவிடப்பட்டவர்களுமானசனங்கள் மறுதினமே ஆபத்துநீங்கியோரானர்கள். இந்த நியாயத்தை முன்னிட்டு இந்தவில்லைகள் "சின்-யோ" அல்லது திவ்விய மருந்து என்று அழைக்கப்படலாயின.

சக்கிரவர்த்தி கடுமையான சுரங்கள்கண்டு வருந்திக்கொண்டிருந்தார். இந்தப்பிரான்சியவில்லைகள் தம்மைக் குணப்படுத்துமென அனுபவத்தைக் கொண்டு அவர் அறிந்தபோதிலும் சீன டக்றர்மார் அவைகளை அவருக்குக்கொடுக்க முற்றுகமறுத்துவிட்டார்கள். கடைசியாகத் தமக்குண்டான வருத்தம் மிகமோசமானபோது, சக்கிரவர்த்தி தமது விருப்பத்தை வற்புறுத்தத்தீர்மானித்து அம்மருந்திலே குறித்தஅளவில்அரைவாசி தமக்குக் கொடுக்கும்படி டக்றர்மாருக்குக் கட்டளையிட்டார். மாலைவேளையாயிருந்தும் சுரங்கள்தணிந்தன. மறுநாள் அவருக்கு அதிக குணந்தெரிந்தது. பிந்தஅவருக்கு நாலாம்முறைச்சுரம் சிலமுறைஉண்டாயிற்று. ஒன்றாலும் இந்தச்சுரம் கடுமையாக இராதபோதிலும் இந்தச்சுரங்களுக்கு ஓர்மாற்று மருந்தை அறிந்துள்ளஎவரும அதைப் பரீட்சித்துக் குணமுண்டாக்கும்படியாக மாளிகைக்குவருமாறு நகரில் பிரசித்தஞ்செய்வித்தார்.

விஸ்தேலு சுவாமியாரும், நானும் ஒருறாத்தல் குயினையும் நம்முடன் கொண்டு மற்றவர்களுடன் மாளிகை சென்றேம். இந்தமருந்து பீக்கிங்நகரில் இன்னுமே அறியப்படாததாய் இருந்தது. நாலாம்முறைச்சுரத்துக்கும், மற்றும் கடுமையானசுரங்களுக்கும் குணமாக்குவதிலே ஐரோப்பாவில்அறியப்பட்ட அதிகம்நிச்சயமான மருந்து அதுவேயென்று நாங்கள் சிபாரிசுபண்ணினேம். அத்துடன் அது கொடுபடவேண்டிய முறையையும் எடுத்துக்கூறினேம். (மிகுந்த சித்தியுடன்) ஒருதொகையான பேர்களில் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. ஓர்நாள்இரவு சக்கிரவர்த்திக்கும் சுகமாயிருக்கவில்லை. அவர்இந்தப்பரிசோதனைகளின் நற்பலனைப்பற்றிக் கேள்விப்பட்டதும் மேலும் அயர்ந்துகொண்டிராது தாமும் குயினைன் அருந்தினர். அன்று பிற்பகல் மூன்றுமணிக்கு அவருக்குத்திரும்ப வரவேண்டியசுரம் நின்றுவிட்டதுடன் தமக்குஅதிககுணம்ஏற்பட்டிருப்பதாகவும் அவர்உணர்ந்தார். அவரதுமாளிகையில் ஏற்பட்டகுதூகலம் பெரிதாயிற்று. அதுமுதல் சக்கிரவர்த்தி ஒழுங்காகஇந்தமருந்தை உபயோகித்துவந்தார். அவரின்சுகம் நாள்தோறும் திருத்தமுற்றது. சுரங்களிலிருந்து குயினைன் தம்மைக்காத்துவைத்தது என்று அவர்பிரசித்தமாக அறிக்கையிட்டார். முன்னர் ஓர்சீனஅதிகாரிக்குச் சொந்தமாயிருந்த ஓர் மனையை எங்கள்மிஷனுக்கு வெகுமானித்தார். இந்தஅதிகாரி இராசதுரோகம்செய்த காரணமாகத் தாத்தாரியநாட்டுக்குத் துரத்தப்பட்டான்.

அநேக நூற்றூண்டுகட்குப் பின்னரும் இன்றைக்கும் சுரங்களைக் குணமாக்கச் சிங்கோனபாவிக்கப்படுகிறது. சிங்கோனவிலிருந்து செய்யப்படுகிற குயினைன் மலேரியாவுக்கு ஓர்சித்திகரமான மருந்தாகும். முந்தியசர்வதேச சங்கத்தாலே நியமிக்கப்பட்ட மலேரியாநிபுணர்களின் கம்மிற்றியானது 1938-ம்ஆண்டு விடுத்தஓர் அறிக்கையிலே மலேரியாவராமல் ஓர்பாதுகாப்பாக மலேரியாக்காலமுழுவதும் தினமும் 6 கிறேய்ன் குயினைன் பாவிக்கவேண்டுமென்று சிபாரிசுபண்ணியும், இன்னும்ஓர்கால் மலேரியா காணுமிடத்து 5 முதல் 7 நாட்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறெய்ண் பாவிக்கவேண்டுமென ஆலோசனை கூறியிருக்கின்றது.

### நேர்த்தியின் பூர்த்தி

அர்ச். ஆரோக்கியநாதரிடமும், அர்ச். யூட்தடயஸிடமும் எனதுநோய் குணமாகும்படி தாழ்மையுடனும், அதிபத்தியுடனும் வேண்டினேன். அவர்கள்மன்றுட்டுக்கிரங்கித் தேவன் எனக்குக் கூடிய கெதியில் நற்சுகத்தைத் தந்தார். இவ்வர்ச்சியசிஷ்டர்களின்நாமங்கள் என்றும் எங்கும் புகழப்படுவதாக, என்நேர்த்திப்படி இதைக் காவலனில் பிரசுரிக்கிறேன்.

பெரியதெரு, M. D. L.
யாழ்ப்பாணம்.

## கோலவிவாகம்

திரு. M. G. இராசநாயகம் பிளான்ரர் அவர்களின் சிரேஷ்ட புதல்வராய், கல்லோயாக் குடியேற்றதிட்டப் பிரதான சேர்வயராய் விளங்கும் திருவளர் செல்வன் M. A. G. தனராசா அவர்களுக்கும், யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டு உபசக்கிடுத்தார் திரு. B. P. யோசெவ் தம்பையா அவர்களின் புத்திரியும், கரம்பன் ஆங்கிலபெண்கலாசாலை ஆசிரியையுமான திருவளர் செல்வி ஸ்கொலாஸ்றிக்கா வயலற்றுக்கும் யாழ்ப்பாணம் பரிசுத்த அடைக்கலநாயகிஆலயத்திலே பெருந்திரளான இனசனர் சிநேகிதர் கூடியசமுகத்திலே சென்ற வைகாசிமாதம் 16-ந் திகதி புதவாரம் காலை 7 மணிக்கு அவ்வாலய கட்டளைக்குரவரான வண. B. வில்லியம் யேசுதாசன் சுவாமியவர்களால் மெய்விவாகதிருச்சடங்கு சிறப்பாகநிறைவேற்றிப் பாடகர்குழாமின் துணையுடன் திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்படலாயிற்று. அத்தருணம் ஆலயமும், பலிபீடமும் அன்றலர்ந்த அழகியபலவர்ண நறுமணப் புஷ்பங்களாலும், பசுந்தளிர்களாலும் மிகவும் வனப்புற்றுவிளங்கியது.

திருமணவைபவத்தின்போது தமது துணைக்குரவருடன் சமுகந்தந்த மட்டக்களப்பைச்சேர்ந்தயேசுசபைக் குரவரான வண. குக்சுவாமியவர்கள் மெய்விவாகத்தைப்பற்றி மனவருட்சிக்குரிய அரியதோர்பிரசங்கஞ்செய்து புதியதம்பதிகளுக்கு ஆசிகூறினின்றூர். திரிகோணமலை டிஸ்திறிக்நீதிபதி திரு. ஜி. தோமஸ்அவர்களும், கொழும்பிலே அரசாங்க கைத்தொழிற்பகுதிக் கணக்கதிபரான S. V. F. செல்வநாயகம் அவர்களும் விவாகப்பதிவுச் சாட்சிகளாயிருந்தார்கள்.

பின்னர் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடந்தேறிய பரிமளிப்பான பெரும் உபசாரணைக்குப் பெருந்தொகையானேர் சமுகமளித்திருந்தார்கள். அத்தருணம் யாழ்ப்பாண டிஸ்திறிக்நீதிபதி திரு. ஜெயவிக்கிரம அவர்களும், அப்புக்காத்து A. R. சுப்பிரமணியம்அவர்களும் இனியசொற்பொழிவுகள் நிகழ்த்திப் புதியதம்பதிகளுக்குச் சோபனங் கூறினர்கள். யாழ்ப்பாண மேற்றிராணியாரான மகாவந். J. எமிலியானுஸ் பிள்ளை அவர்கள் அழகேமயமாய் விளங்கிய மணமகள் இல்லத்துக்கெழுந்தருளி, மணமக்களுக்குச் சோபன வாழ்த்துரைகள்கூறி ஆசிவழங்கினர். இலங்கையின் பலவிடங்களிலும், மலாய்நாட்டிலுமிருந்து தொகையான வாழ்த்துச்செய்திகளும் அவர்களுக்குக் கிடைத்தன. இப்புதியகுடும்பமானது, அஷ்டஐஸ்வரியங்களும்பெற்று இனிதே வாழ எம்பெருமான் திருவருள் பாலிப்பாராக!

### சுதேசமகிமைப் பட்டங்கள்

மன்னர்பிரானின் ஜனனவிழாச் சந்தோஷத்தை முன்னிட்டுக் கவர்னர் ஜெனறல் அவர்கள் இலங்கைப் பிரமுகர்களான 13 பேருக்குச் சுதேசமகிமைப்பட்டங்கள் வழங்கியிருக்கின்றூர். இவர்களிலே தமிழர்கள் எழுவராவர். இவர்களிலே இருவர் ஜே. பி. பட்டமும், இருவர் முதலியார் பட்டமும், மூவர் முகாந்திரப்பட்டமும் அருளப்பெற்றிருக்கின்றூர்கள்.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 14 1951.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org